பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆடி 08 திங்கட்கிழமை (24.07.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 238

# இரவு வானில் புலிகளின் விமானம் 'பரசூட்' மூலம் குதித்தும் பயிற்சியாம்!

## வன்னியில் மற்றும் ஒரு இறங்கு தளம்; விமானப்படைக்கு அதிர்ச்சி

கொழும்பு, ஜூலை 24

விடுதலைப் புலிகளின் விமானம் எனச் சந்தேகிக்கப்படும் விமானம் ஒன்று வவுனியாவில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி மீது இரவு நேரத்தில் பறந்தது என்ற தகவல் ஸ்ரீலங்கா விமானப்படை வட்டாரங்களை அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

கடந்த 19 ஆம் திகதி இரவு 8.30 மணியளவில் சந்தேகத்துக்கிடமான விமானம் ஒன்றின் பறப்புச் சைகையை வவுனியாவில் உள்ள விமானப்படை அதிகாரிகள் 'ராடர்' திரையில் அவதானித்துள்ளனர். இனந்தெரியாத விமானம் ஒன்றின் ஓசையை இரவு நேரம் தாங்கள் கேட்டனர் என்பதை அந்தப் பகுதியில் உள்ள பொலிஸாரும் உறுதிப்படுத்தியிருக்கின்றனர்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி மீது புலிகளின் விமானம் பறந்தது என்ற தகவல் விமானப்படைக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருப்பதாகப் பாதுகாப்பு ஆய்வாளர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

இலகு ரக விமானங்களைப் பயன்படுத்தி புலிகள் வன்னியில் இரவு வேளைகளில் விமானிகளுக்குப் பயிற்சி கொடுத்து வருகின்றனர் என்று ஏற்கனவே புலனாய்வுப் பிரிவினருக்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சமஷ்டி அல்லது அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு மூலம் தீர்வு

# வடக்கு - கிழக்கில் முஸ்லிம்களுக்கு தனியான விசேட சுயாட்சி அலகு!

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோருகின்றது

கொழும்பு, ஜூலை 24

**சமஷ்டி அல்லது அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படலாம். எனினும், வடக்கு - கிழக்கில் முஸ்லிம்களுக்குத் தனியான சுயாட்சி அலகு அமைய வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கின்றது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி.**

அமைதிப் பேச்சு, இடைக்கால ஏற்பாடு மற்றும் இறுதித் தீர்வு ஆகியவற்றில் உள்ளடக்கப்பட வேண்டியவை எனத் தெரிவித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 18 அம்சத் திட்ட வரைவு ஆவணம் ஒன்றை நேற்று வெளியிட்டது.

அத்திட்ட வரைவில் வடக்கு - கிழக்கில் உள்ள முஸ்லிம்களுக்கான நிலத் தொடர்பற்ற தனியான சுயாட்சி அலகு குறித்தும் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் மீள் குடியேற்றம் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கிற்கு வெளியே உள்ள முஸ்லிம்களின் அபிலாஷைகள் - அவர்

(13 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கை பிரிக்குமாறு கோரி 10 லட்சம் கையெழுத்துகள்

வடக்கு-கிழக்கு மாகாணத்தைப் பிரிக்குமாறு கோரி 10 லட்சம் கையெழுத்துக்களைத் திரட்டும் நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

'புதிய தலைமுறை' என்ற சிங்கள அமைப்பே இந்தக் கையெழுத்து வேட்டையில் ஈடுபட்டிருக்கின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

# அமைதி முயற்சிகளுக்கு அவசியமானால் அரசுடன் முஸ்லிம் காங்கிரஸ் இணையும்

## அக்கட்சியின் தலைவர் ஹக்கீம் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 24

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இணையும் விடயத்தில் திறந்த மனதுடன் உள்ளது. நாம் அரசுடன் இணைவதால் அமைதிப் பேச்சுக்கான - சமாதானத்திற்கான - சூழல் ஏற்படுமாயின் அது நல்லதே. ஆனால், இப்போது அதற்கான புறச்சூழல் எதுவும் ஏற்படவில்லை.

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் நேற்று தாருஸ்ஸலாமில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றுகையில் கூறினார். அவர் இது குறித்து அங்கு மேலும் கூறியதாவது:-

நாம் நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டுமென விரும்புகிறோம். அதற்காக அரசுக்கு

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் நால்வர் கைது!

வவுனியா,ஜூலை24

வவுனியா, சுந்தரபுரம் பகுதியில் நேற்றுக் காலை படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் நால்வர் கைதுசெய்யப்பட்டனர்.

அந்தப் பகுதியைச் சேர்ந்த வி.சைபரூபன் (வயது 27), எம்.கேதீஸ்வரன் (வயது 23), எஸ்.கோவிந்தராஜன் (வயது 55), பாவலன் (வயது 25) ஆகியோரே படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

கைதானவர்களை பொலிஸாரிடம் கைய

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கோணாவிலில் யுவதி திருகிக் கொலை; சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது!

### கொள்ளையடிக்கப்பட்ட நகைகளும் மீட்பு

கிளிநொச்சி,ஜூலை, 24.

கிளிநொச்சி,முறிப்பு கோணாவில் பிரதேசத்தில் யுவதி ஒருவரைக் கொன்று அவர் அணிந்திருந்த நகைகளை கொள்ளையடித்தார் என்ற சந்தேகத்தின் பேரில் தமிழீழக் காவல் துறையினரால் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

புதுமுறிப்புக்குள வாய்க்காலில் இருந்து கோணாவில் காந்தி கிராமத்தைச் சேர்ந்தவரான மகேஸ்வரன் சரன்யா (வயது18) என்பவரின் சடலம்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கல்வியங்காட்டில் இளைஞர்களிருவரும் மல்லாகத்தில் ஒருவரும் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம்,ஜூலை24

மல்லாகத்தில் வர்த்தகர் ஒருவரும் கல்வியங்காட்டில் இளைஞர்கள் இருவரும் நேற்று இனம் தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

மல்லாகம் மகாவித்தியாலயத்துக்கு முன்பாக -காங்கேசன்துறை வீதியில் - நேற்று நண்பகல் 12 மணியளவில் வர்த்தகர் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சிவப்பிரகாசம் திருநாவுக்கரசு (வயது - 58) என்ற வர்த்தகரே கொல்லப்பட்டவராவார்.

சைக்கிளில் சென்றுகொண்டிருந்த சமயம் இவரை மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரியாதவர்கள் சுட்டுவிட்டு ஓடி விட்டனர்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் நீதித்துறையிலும் பயங்கரவாதத் தடைச்சட்டம்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தனது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விரைவில் 'பயங்கரவாத தடைச்சட்டம்' ஒன்றை அமுல் படுத்தத் திட்டமிட்டிருக்கிறது என்று தமிழீழ நீதித்துறைப் பொறுப்பாளர் பராவை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது. தாக்குதல் நடவடிக்கைகளின் போதும், ஏனைய சந்தர்ப்பங்களிலும் விடுதலைப்புலிகளால் கைதுசெய்யப்படுகின்ற இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் உட்பட போர்க் கைதிகளாக கருதப்படுவோரை தடுத்துவைத்து (14 ஆம் பக்கம் பார்க்க)

## வேலணையில் கிரனேட் வீச்சு; இரண்டு படையினர் காயம்!

வேலணை,ஜூலை24

வேலணை வங்களாவடிச் சந்தியில் - முருகன் கோயிலுக்கு முன்பாக - பணியில் இருந்த கடற்படையினரை இலக்கு வைத்து நேற்று முற்பகல் 10.30 மணிக்கு கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் இரு கடற்படையினர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து கடற்படையினர் அப்பகுதியைச் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர். இந்தச் சமயத்தில் பலரும் தாக்குதலுக்கு ஆளாகினர் என்று கூறப்படுகிறது.

இந்தச் சமயத்தில் அப்பகுதியில் உள்ள

(14 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மாவைக் கந்தன் தேர்த் திருவிழாவில் ஆயிரக் கணக்கில் பக்தர் குவிந்தனர்

யாழ்ப்பாணம்,ஜூலை24

நேற்று இடம்பெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத் தேர்த் திருவிழாவில் ஆயிரக் கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

யாழ்.பஸ் நிலையத்திலிருந்து தெல்லிப்பழை சோதனைச் சாவடி வரை மேலதிக பஸ் சேவைகள் நடைபெற்றன.

இந்த பஸ்களிலும், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சைக்கிள்களிலும் சென்றவர்கள் மேற்குறிப்பிட்ட சோதனைச் சாவடிக்கு அப்பால் ஆலயம் வரை செல்ல மூன்று பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

இதேவேளை, குடும்ப வாகனங்களில் சென்றவர்கள் அந்த வாகனங்களிலேயே ஆலயம்வரை செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

தெல்லிப்பழை சோதனைச் சாவடி முன்பாக பக்தர்களின் நலன் கருதி தெல்லிப்பழை யூனியன் கல்லூரி லியோ கழகத்தின் ஏற்பாட்டில் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் நடத்தப்பட்டது.

நேற்றுக் காலை 8 மணி முதல் தெல்லிப்பழை சோதனைச் சாவடியூடாக பக்தர்கள் மாவிட்டபுரம் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

சோதனைச் சாவடியில் அடையாள அட்டைகளைக் கொடுத்து விட்டு ஆலயத்துக்குச் சென்றவர்கள் திரும்பும்போது அடையாள அட்டைகளை மீளப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர் என்றும் -

ஆடி அமாவாசை தினமான இன்று கீரிமலை சென்று திரும்புபவர்களின் அடையாள அட்டைகளைப் பெற்று மீளத் தரும்போது இந்த


மாவைக் கந்தனுக்கு நேர்த்திக்கடன்...

சிரமங்கள் நீக்கப்பட வேண்டும் என்றும் -

பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இன்று கீரிமலைக்கு தெல்லிப்பழை மற்றும் சேந்தன்குளம் சோதனைச் சாவடிகள் ஊடாகப் பொதுமக்கள் அனுமதிக்கப்படவுள்ளனர்.

நேற்றைய தினம் போன்றே குடும்ப வாகனங்களில் மட்டுமே சோதனைச் சாவடிகளுக்கு அப்பால் செல்ல முடியும். மற்றய வாகனங்களில் வருவோருக்கென சோதனைச் சாவடிகளுக்கு அப்பால் விசேட பஸ் சேவை நடைபெறும். (86-ரி)

## வாழைச்சேனையில் கைக்குண்டு மீட்பு

ஏறாவூர், ஜூலை 24

வாழைச்சேனை - கிண்ணையடிப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை இரண்டு கைக்குண்டுகள் இராணுவத்தினரால் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்று வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மாலை 6.30 மணியளவில் வீதியால் வந்துகொண்டிருந்த இளைஞர் ஒருவரைச் சோதனையிட முற்பட்ட போது அந்த இளைஞர் தான் செலுத்தி வந்த சைக்கிளைக் கைவிட்டு விட்டுத் தப்பியோடியுள்ளார்.

இதன் பின்னர் சைக்கிளைச் சோதனையிட்ட போது மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு கைக்குண்டுகளை இராணுவத்தினர் கண்டெடுத்துள்ளனர்.

படையினரின் வாகனத் தொடரணி மீது தாக்குதல் மேற்கொள்வதற்காகவே இந்த இளைஞர் கைக்குண்டுகளைக் கொண்டு வந்திருக்கலாம் என்று படையினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

அதனையடுத்து, இப் பிரதேசத்தில் படையினர் உடனடியாக சுற்றி வளைப்புத் தேடுதலொன்றை மேற்கொண்ட போதிலும் எவரும் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்படவில்லை. (க)

## வடமராட்சி மீனவர் சங்க தலைவரைக் காணோம்!

யாழ்ப்பாணம், ஜூலை 24

வடமராட்சி, ஆதிகோயிலடி மீனவர் சங்கத்தின் தலைவரும், வடமராட்சி வடக்கு மீனவர் சங்கங்களின் சமாசத்தின் நிர்வாக சபை உறுப்பினருமான ராஜதுரை இந்திரராஜா (வயது - 38) கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் காணாமல் போயிருக்கின்றார் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வல்வெட்டித்துறையிலுள்ள தமது வீட்டிலிருந்து பருத்தித்துறையில் அமைந்துள்ள மீனவர்சங்க அலுவலகத்துக்கு சைக்கிளில் புறப்பட்டுச்சென்றார் என்றும் - பின்னர் அவர் வீடு திரும்பவேயில்லை என்றும் அவரது குடும்பத்தினர் தெரிவித்திருக்கின்றனர். (1)

## துறைமுகப் பகிஷ்கரிப்பால் ரூ. 400 மில்லியன் நட்டம்

கொழும்பு துறைமுகத்தின் ஊழியர்கள் கடந்த சில தினங்களாக மேற்கொண்டு வந்த பகிஷ்கரிப்பு நடவடிக்கை காரணமாக இலங்கை துறைமுக அதிகார சபைக்கு 400 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டிருப்பதாக சபையின் உபதலைவர் ஆனந்த பீ.விக்கிரம தெரிவித்திருக்கிறார். துறைமுகப்பணிகள் போராட்டம் கைவிடப்பட்டதையடுத்து தற்போது வழமைக்குத் திரும்புகின்றன. என்றும் - அவர் கூறினார். (க)

## பழையபூங்காவில் அரச அதிபர் இல்லம்

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ்.அரச அதிபரின் உத்தியோகபூர்வ இல்லம் ஒன்று பழையபூங்கா வளாகத்தினுள் 14.5 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சமூக சேவை அமைச்சின் நிதியுதவியுடன் இந்த உத்தியோகபூர்வ இல்லம் அமைக்கப்படவுள்ளது. இதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் கட்டடத்திற்கான அடிக்கல் நடும் விழா அடுத்த மாத முற்பகுதியில் இடம் பெறும். (1-13)

# அரசமைப்புக்கான 18 கோட்பாடுகளை வெளியிட்டது முஸ்லிம் காங்கிரஸ் கட்சி

அரசமைப்புக்கான 18 அடிப்படைக் கோட்பாடுகளை விவரிக்கும் ஆவணம் ஒன்றை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நேற்றுக் காலை கொழும்பில் செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டது.

இந்தப் பதினெட்டுக் கோட்பாடுகளுக்கும் முன்னுரையாக அந்த ஆவணத்தில் சில விடயங்கள் தெரிவிக்கப்பட்டன.

அவற்றில் முக்கியமான சில விடயங்களும் மற்றும் பதினெட்டுக் கோட்பாடுகளும் வருமாறு:-

அமைதிப் பேச்சுகளும், இறுதியில் எட்டப்படும் தீர்வும் சில கோட்பாட்டுக் கட்டமைப்புக்குள்ளேயே அமைய வேண்டும்.

பன்முக மற்றும் பங்குபற்றுதலுடன் கூடிய ஜனநாயக முறைமை, அதிகாரப் பகிர்வு, மனித உரிமைகள், சமூக நீதி, சமச்சீரான அபிவிருத்தி, வெளிப்படையானதும் பொறுப்புக் கூறவேண்டியதுமான முறைமை ஆகிய கோட்பாடுகளுக்கு அவை உட்பட்டிருக்க வேண்டும்.

இறைமையுள்ள, ஒன்றுபட்ட, ஜனநாயக, மனித உரிமைகளை மதிக்கின்ற, பன்முகத் தன்மையுடைய, நீதியின் ஆட்சி கொண்ட இலங்கையைத் தரிசிப்பதையே எமது திட்டவரைபு நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த முக்கியமான அடிப்படைக் கோட்பாடுகள் எல்லா வேளைகளிலும் - இடைக்கால ஏற்பாட்டு சமயத்திலும் கூட - கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

இந்த இடைக்கால ஏற்பாட்டு வேளை சில சமயங்களில் குறிப்பிடத்தக்க காலத்துக்கு நீடிக்கலாம். இந்தக் காலகட்டத்தில் பல பல நிறுவனங்களும், நடைமுறைகளும் உருவாக்கப்படலாம். சில சமயங்களில் வேறு நிலையான நிறுவன முறைக்குப் பின்னர் நிரந்தரமாக மாறுவது கஷ்டமானதாகவும் கூட அமையலாம்.

எனவேதான், எந்த இடைக்கால ஏற்பாடும் இந்த அமைப்புக்கான அடிப்படைக் கோட்பாடுகளுக்கு அமைவானதாக இருக்க வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்துகின்றது.

அந்த அரசமைப்புக்கான அடிப்படைக் கோட்பாடுகள் பின்வரும் 18 விடயங்களையும் கூட உள்ளடக்கி இருக்க வேண்டும்.

1.இலங்கை சுதந்திரமும், இறைமையும்,தன்னாதிக்கமும் கொண்ட ஒன்றுபட்ட நாடாகும்.

2.இலங்கை சமூகத்தின் பன்மைத்துவத் தன்மையை அங்கீகரிக்கும் அதேசமயம் அரசுக்கட்டமைப்பின் உள்ளடக்கமும் அத்தன்மையைப் பிரதிபலிப்பதை உறுதிப்படுத்தவதோடு, இலங்கை மக்களிடையே ஒத்துழைப்பு, பரஸ்பர நம்பிக்கை, நம்பகத்தன்மை, புரிந்துணர்வு ஆகியவற்றை மேம்படுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

3.தேசிய மற்றும் பிராந்திய சட்டவாக்கல் சபைகளில் பாரபட்சமற்ற மக்கள் பிரதிநிதித்துவம்.

4.எல்லா சமூகத்தினதும், நாட்டின் எல்லாப் பகுதிகளினதும் முழுப் பிரதிநிதித்துவத்துக்கும் பங்குபற்றலுக்கும் வழிசெய்யும் விதத்தில் மத்தியில் ஓர் அரசுக்கட்டமைப்பு.

5.சமஷ்டி மூலம் அல்லது அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வுமூலம் எல்லா சமூகங்களுக்கும் அதிகாரமளிக்கும் முறைமை அரசமைப்பால் நிறுவப்பட்டு பாதுகாக்கப்படுதல்.

இது முஸ்லிம் சமூகத்துக்கென விசேடமாக வடக்கு -கிழக்கின் பகுதிகளை உள்ளடக்கி, உருவாக்கப்பட்ட சுயாட்சி அலகையும் கொண்டிருக்க வேண்டும்.

6.பிரதேசங்கள் மற்றும் சமூகங்களின் உண்மையான தேவை மற்றும் ஆற்றலுக்கு பொருத்தமான விதத்தில் கட்டமைப்பும் அதிகாரங்களும் நெகிழ்ந்து கொடுக்கக் கூடிய ஒரு பகிர்வு முறை.

7. தனி நபர்களைப் பாதிக்கக்கூடிய தீர்மானங்களை எடுக்கும் விடயங்களில் அவர்களின் செயலூக்கமான பங்களிப்பை உறுதி செய்தல். இது, அரசின் எல்லா மட்டங்களிலும், தேர்தல் சமயங்களில் மட்டுமல்லாமல் எப்போதும் செய்யப்படுதல்.

8.அதிகாரப் பகிர்வு ஏற்பாடு உட்படப் பகிர்வு அளிக்கப்பட்ட பிரிவுகளில் எல்லோரினதும் முழுப்பங்களிப்பையும் பிரதிநிதித்துவத்தையும் உறுதிசெய்யும் வகைகளில் பல கட்சி மற்றும் ஜனநாயக முறைமை.

9.கிடையாகவும் நிலைக்குத்தாகவும் உள்ள பல்வேறு பிரிவுகளிடையே ஒத்துழைப்பு மற்றும் தொடர்பாடலுக்கு பொருத்தமான கட்டமைப்பு.

10. மனித உரிமைகளை வலிமையாகவும் பயனுள்ள வகையிலும் பேணுவதற்கு தெளிவான, விசாலமான ஏற்பாடுகள்.

11.வேறுபட்ட திடகாத்திரமுடைய நபர்கள், சிறுவர்கள் மற்றும் பெண்களின் உரிமைகளைப் பேணும் திடசங்கற்பம்.

12. சமுதாயத்தின் சகல மட்டங்களிலும் உள்ள பிரதியனுகூலமான - சிறப்புரிமைகளற்ற- உரிய பிரதிநிதித்துவமற்ற- சமூகத்தவர் மற்றும் பிரிவினரை மேம்படுத்துவது அரசின் கடப்பாடு என்பதும் சட்டரீதியாக நடைமுறைப்படுத்தப்படும் பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் என்பவையும் அடங்கலாக சமூகநீதி, அத்துடன் சமச்சீரான வாய்ப்புகளும், நேர்சீரான பொருளாதார அபிவிருத்தியும் உறுதிப்படுத்தப்படல்.

13. நாடு முழுவதிலும் மற்றும் பிரதேசங்களிலும் சிங்களமும் தமிழும் உத்தியோகபூர்வ மொழிகள் என அங்கீகரிக்கப்படுவதுடன் பயன்பாட்டில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவை தேசிய மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்படல்.

14.அரச நடவடிக்கைகளில்- குறிப்பாக பொதுநிதி சம்பந்தப்பட்ட விவகாரங்களில் - வெளிப்படையானதாகவும் பொறுப்புக்கூற கடப்பாடுடையதுமான பயன்தரு கட்டமைப்பு.

15. ஆயுதப் படைகளை சிவிலியன் கட்டுப்படுத்தும் நடைமுறை மற்றும் பொலிஸ், ஆயுதப்படைகளில் பொறுப்புக்கூறும் கட்டமைப்பு ஆகியவைமூலம் மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம்.

16. தகுதிவாய்ந்த, சுயாதீனமான, துணிச்சலான ஒரு நீதித்துறை. அது, நியமன விடயத்தில் சுயாதீன கட்டமைப்பையும், பதவிக் காலத்தில் வலிமையான பாதுகாப்பை வழங்குவதையும், மேன்முறையீட்டுக்குப் பொருத்தமான முறைமையையும், எல்லோராலும் மதித்து நம்பிக்கை வைக்கப்படும் உயர்நீதிமன்றத்தை இறுதி நியாயாதிக்க அமைப்பாகவும் கொண்டிருத்தல் வேண்டும்.

17. திறமை முறைமையும், பிரதேசங்களினதும் நாட்டினதும் இன விகிதாசாரத்தை பிரதிபலிப்பதையும் அடிப்படையாகவும், அரசியல் தலையீடு அற்றதாகவும் உள்ள நிபுணத்துவமிக்க, தகுதி வாய்ந்த ஒரு பொதுச் சேவை.

18. தற்போதுள்ள சட்டடங்கள் உட்பட தேசிய மற்றும் பிரதேச சட்டவாக்கங்கள், கொள்கைகள் அனைத்தும் நீதிமன்றங்களினால் மீளாய்வு செய்யப்படுவதற்கு இடமளிப்பதன்மூலம் அரசமைப்பின் உயர்நிலையை உறுதிப்படுத்துவதோடு எந்த அரசுப் பிரிவும் சட்டத்துக்கு மேலானது அல்ல என்பதை உறுதிப்படுத்தலும்.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவில் நிறுவப்பட்ட

# ஐந்து பொதுநோக்கு மண்டபங்கள் நேற்று அரச அதிபரினால் திறந்து வைப்பு

'நிக்கொட்' மற்றும் 'நியாப்' திட்டங்களின் நிதியுதவியுடன் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட ஐந்து பொதுநோக்கு மண்டபங்கள் நேற்று வைபவ ரீதியாக பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டன.

நேற்றுக் காலை 7 மணிமுதல் மாலை 6.30 மணிவரை தொடர்ச்சியாக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பல்வேறு இடங்களிலும் இது தொடர்பான நிகழ்வுகள் நடைபெற்றன.

அனலைத்வு, எழுவைதீவு, கரம்பொன் கிழக்கு, நாரந்தனை வடக்கு, புளியங்கூடல் ஆகிய இடங்களில் நடைபெற்ற நிகழ்வுகளில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மண்டபங்கள் அனைத்தையும் திறந்து வைத்தார்.

நேற்றுக் காலை அனலைதீவு சென்றடைந்த யாழ்.அரச அதிபர் மற்றும் குழுவினர் புளியந்தீவு நாகேஸ்வரன் கோயில், அனலைதீவு ஐயனார் கோயில் மற்றும் பல ஆலயங்களுக்குச் சென்று அங்கு நடைபெற்ற விசேட பூசைகளில் கலந்துகொண்டனர். இந்த விசேட பூசைகளின் போது அரசாங்க அதிபர் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டார். தொடர்ந்து அனலைதீவு வடக்கு, தெற்குப் பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்ட பொது மண்டபங்கள் திறந்து வைக்கப்பட்டன. அங்கு பொதுமக்கள் பிரதிநிதிகளைச் சந்தித்த அரச அதிபர் அவர்களது குறைகளைக் கேட்டறிந்தார்.

பின்னர் எழுவைதீவுக்குச் சென்ற அரச அதிபர் தலைமையிலான குழுவினருக்கு எழுவைதீவு றோ.க.த.பாடசாலையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் புதிய பொதுநோக்கு மண்டபத்தை நிர்மாணிப்பதற்கான அடிக்கல்லை யாழ்.அரசாங்க அதிபர் நட்டுவைத்தார் அதனைத் தொடர்ந்து ஏனைய பொது மண்டபங்கள் திறந்து வைக்கப்பட்டன. தீவகம் [illegible]க்கு, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனனும் அவரது பணிமனை அலுவலர்களும் நிகழ்வுகளை நெறிப்படுத்தினர். (எ-111)

உங்கள் விமானப் பயணத்திற்கு
Aero Lanka
In Domestic Operation
Head Office
No.500, Galle Rd.,
Colombo-6, T:2505 632/3
Fax: 2500 626
Trinco Office
No.47, Kandy Rd.,
Trincomalee. T: 026 222 1519
Fax: 026 2221519
Jaffna Office:
No.86, Point Pedro Rd.
Jaffna. T:021 222 6242
021 2223984
Fax: 021 222 5600
Branch:
No.14, New Market Bldg.,
Chavakachcheri.T: 021 2227979
Fax: 021 2227979
New way of Flying

யாழ் - கொழும்பு விமான சேவை

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# ஜே.வி.பியை அரவணைக்க மஹிந்தர் எதைப் பணயமாக வைக்கிறார்?

யுத்தக் கருமேகங்கள் இலங்கைத் தீவின் மேல் கருக்கட்டத் தொடங்கிவிட்டன. மென் தீவிர யுத்தக் காற்று வீசும் நிலைமை மெல்ல மெல்லத் தீவிரமடைந்து, பெரும் புயலாகி, வன்முறைச் சூறாவளியாகச் சுழன்றடிப்பதற்கான ஏது நிலைகள் புலப்படத் தொடங்கியுள்ளன.

சிங்கள - பௌத்த பேரினவாதத்தினதும், அந்தப் போக்கிலான அரசுகளினதும் வரலாற்றுப் பெறுபேறாகப் பிறப்பெடுத்த தமிழ்த் தேசியம், தன்னை நிலைநிறுத்தி, தன் இருப்பை உறுதிசெய்வதற்கான இறுதிப் போராட்டத்துக்குத் தன்னைத் தயார்ப்படுத்தும் வேளை நெருங்கி வருவதாகத் தென்படுகிறது.

இலங்கைத் தீவின் சிங்களத் தேசிய அரசியல் சக்திகள் தமிழருடன் ஒத்து வாழ்வதைக் காட்டிலும் எதிர்த்து நிற்பதில் தமக்குள் உடன்பாடு கண்டு வந்துள்ளமையைக் கடந்த ஐம்பது ஆண்டு கால அரசியல் சரித்திரம் எமக்குத் தெளிவாக உரைத்துள்ளது. அது மீண்டும் ஒரு தடவை வலுவாக அரங்கேறப் போகிறது என்பதை இப்போது வெளியாகும் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன.

ஜே.வி.பியை தமது அரசுக்குள் இழுத்துச் சேர்த்துக்கொள்ளும் சமரசப் பேச்சு முயற்சிகளை இலங்கைத் தீவின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இப்போது வெற்றிகரமாக நகர்த்துகின்றார் என்று கொழும்பு ஆங்கில, சிங்கள வார இதழ்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றன. அவற்றின் தகவல்படி இதுவிடயத்தில் மூன்று சுற்றுப்பேச்சுகள் முடிவடைந்து விட்டன. விரைவில் இணக்கநிலை ஏற்பட்டு ஜே.வி.பி. உறுப்பினர்கள் அமைச்சர்களாக, அக்கட்சி அரசின் பங்காளியாகிவிடும். இதுவரை வெளியிலிருந்து அரசுக்கு ஆதரவு வழங்கிவந்த ஜே.வி.பி. இனி அரசின் அங்கமாகி அதனுடன் கலந்துவிடப்போகின்றது.

"இனவாதமும், மதவாதமும், பழமைவாதக் கம்யூனிஸமும் ஒன்று கலந்த, குளறுபடியான கருத்தியலில் ஊறித் திளைத்த - தமிழர் விரோத - கட்சியே ஜே.வி.பி." - என்று தலைவர் பிரபாகரனினால் விமர்சிக்கப்பட்ட அமைப்பை தனது அதிகாரப் பங்காளியாக்குவதற்கு அயராது முயற்சிக்கிறார் அதிபர் மஹிந்த ராஜபக்ஷ.

சமாதானப் பேச்சு வாயிலாக - அமைதி முயற்சிகள் மூலமாக - தமிழ் மக்களுக்கு அரசியல் உரிமையும், ஆட்சி அதிகார வலிமையும் வழங்கப்படுவதை மிகக் கடுமையாக எதிர்க்கும் கட்சி ஜே.வி.பி.

தற்போதைய அமைதி முயற்சிகளுக்கு அனுசரணைப் பணி வகிக்கும் நோர்வேயை அப்பணியிலிருந்து அகற்றவேண்டும் என்று பலமாக வலியுறுத்தி அதில் பிடிவாதமாக நிற்கும் கட்சி அது.

யுத்த நிறுத்தத்துக்கு வழி செய்த அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்பாட்டைக் கிழித்தெறிந்து, புலிகளை இராணுவ ரீதியில் அடக்க வேண்டும் என்று ஒற்றைக்காலில் நிற்கும் தென்னிலங்கையின் பிரதான கட்சி அது.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்துக்கு எதிராகவும் வடக்கு - கிழக்குப் பிரிப்பை வலியுறுத்தியும் நீதிமன்றுக்குச் சென்றிருக்கும் கட்சி அது.

ஆழிப்பேரலையால் பாதிப்புற்று அவலப்படும் மக்களின் அத்தியாவசியத் தேவைகளை நிறைவுசெய்யவென உருவாக்கப்பட்ட பொதுக் கட்டமைப்பை செயலிழக்க வைத்த 'பெருமைக்குரிய' கட்சி அது.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினை குறித்து தெளிவான கொள்கைத் திட்டமும், பொதுவான அணுகுமுறையும் அற்ற பேரினவாதக் கும்பலாக விளங்கும் அமைப்பு அது.

மொத்தத்தில் தமிழர் விரோத இனவாதத்திலும், போர் வெறிபிடித்த இராணுவ வாதத்திலும், சிங்கள - பௌத்த மேலாதிக்கத்திலும் ஊறித்திளைத்த தீவிரவாத சக்தியான ஜே.வி.பியுடன் அதிகாரக் கூட்டுவைக்க முயல்கிறார் அதிபர் ராஜபக்ஷ.

இதன்மூலம், அமைதி முயற்சிகளுக்கு சாவு மணி அடிக்கும் சமிக்ஞையை அவர் வெளிப்படுத்த முயல்கின்றார் என்றே கருதவேண்டியிருக்கின்றது.

சிங்களப் பேரினவாத சகதிக்குள் புதைந்து கிடக்கும் தென்னிலங்கை அரசியல் கட்சிகளும், சக்திகளும், அவற்றின் தலைமைகளும் ஈழத் தமிழ் மக்களின் நியாயம் மிக்க அரசியல் அபிலாஷைகளையோ, தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையின் நீதியான அடிப்படைகளையோ ஒருபோதும் புரிந்துகொள்ளப் போவதில்லை என்பது தெளிவு.

அத்தகைய ஒரு தரப்பைத் தம்முடன் கூட்டுச் சேர்த்துக் கொள்வதன் மூலம் தாமும் அந்த வகையறாவைச் சேர்ந்தவர் தான் என்பதை மீண்டும் ஒரு தடவை உறுதிப்படுத்த விழைகிறார் நாட்டின் அதிபர்.

வெளியிலிருந்து அரசுக்கு ஆதரவு தரும் நிலையில் ஜே.வி.பி. இருக்கும்போதே, அந்த இனத்துவேச சக்தியைத் திருப்திப்படுத்தி, சமாளிப்பதற்காக அமைதி முயற்சிகளை நாறடித்தது இலங்கை அரசுத் தலைமை. இப்போது ஜே.வி.பி. அரசுக்குள் இணைந்துகொள்ளும் சூழல் ஏற்பட்டாலோ நிலைமை எப்படியிருக்கும் என்பதை விவாதிக்கத் தேவையில்லை.

ஒத்திசைவற்ற, ஒன்றுக்கொன்று மாறுபட்ட, முரண்பாடுகள் நிறைந்த கருத்துகளையும், கொள்கைகளையும் வரித்துக் கொண்டு அப்பட்டமான இனவாதம் பேசும் சக்திகளை - கட்சிகளை - தமது கூட்டணியில் சேர்ப்பதன் மூலம், அமைதித் தீர்வு குறித்து தமிழர், சிங்களவர் ஆகிய இரு தரப்பினர் மத்தியிலும் இருக்கும் கொஞ்ச நஞ்ச நம்பிக்கையையும் சிதறடிக்க முயல்கிறார் ஜனாதிபதி மஹிந்தர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்த நடவடிக்கையின் பெறுபேறாக நாடாளுமன்றத்தில் அவரின் ஆட்சி ஸ்திரமடையலாம்; பலம் பெறலாம்; உறுதிப்படலாம். ஆனால், ஏற்கனவே நொந்து நொடித்து, நலிவடைந்திருக்கும் அமைதி முயற்சி மேலும் பலவீனமடையும்; பாதிப்புறும்; குழம்பிப் போகும்.

ஜே.வி.பியைத் தனது அரசுக்குள் இழுத்து விழுத்துவதற்காக என்ன சலுகைகளை அக் கட்சிக்கு வழங்குவதற்கு ஜனாதிபதி மஹிந்தர் இணங்கியிருக்கிறார் - உடன்பட்டிருக்கிறார் என்பது தெரியவில்லை.

ஆனாலும், ஜே.வி.பியின் ஆதரவைத் தமது அரசுக்குப் பெற்றுக்கொள்வதற்காக, அமைதித் தீர்வு முயற்சியில் தமிழர்களுக்கு நீதி, நியாயம் கிடைக்கும் முறையில் நடந்துகொள்வதில்லை என்பதைப் பணயமாக வைத்து - 'சூது' ஆக வைத்து - இந்த அரசியல் சித்து விளையாட்டை அவர் ஆரம்பித்திருந்தாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

எது, எப்படியென்றாலும் ஜே.வி.பியை அரவணைப்பதில் மஹிந்தர் காட்டும் விடாமுயற்சி - சளையாத எத்தனம் - அமைதி நடவடிக்கைகளுக்கு சாதகமானதல்ல என்பது மட்டும் நிச்சயம்.

# நல்லைக் கந்தன் பெருந்திருவிழாவில் கேளிக்கைகளுக்கு முற்றாகத் தடை

## நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஜூலை24

நல்லூர்க் கந்தன் பெருந்திருவிழாவின்போது இம்முறை ஆலயச் சூழலில் கேளிக்கை, சாகாச நிகழ்வுகள் நடத்துவதற்கு அனுமதி வழங்குவதில்லை என நேற்று நடந்த கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள வரலாற்றுப் பிரசித்திபெற்ற நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் போது மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் பற்றி ஆராய யாழ். மாநகர இந்து விடுதியில் நடைபெற்ற கூட்டத்தின் போது இத்தீர்மானம் எடுக்கபட்டுள்ளது.

யாழ். மாநாகர ஆணையாளர் சீ.வீ கே.சிவஞானம் தலைமையில் இக்கூட்டம் இடம்பெற்றுள்ளது.

குடாநாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாகவும் -

கடந்த ஆண்டு நடைபெற்ற பெருந்திருவிழாவின் போது ஆலயச் சூழலில் இடம்பெற்ற கேளிக்கை, சாகச நிகழ்வுகளால் எமது கலாசாரத்திற்கு கேடு விளைவிக்கும் சில விரும்பத்தகாத செயல்கள் இடம்பெற்றுள்ளதாலும் - இத்தகைய தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதுதவிர இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட மேலும் சில முக்கிய தீர்மானங்கள் வருமாறு:-

✱ திருவிழாக் காலங்களில் சேவை புரியும் தொண்டர்கள் தங்குவதற்கு பாதுகாப்புத் தரப்பினரிடம் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளல்.

✱ சுகாதாரம் சம்பந்தமான விடயங்களைக் கவனிக்க நல்லூர் இந்து விடுதியில்அதன் அலுவலகம் ஒன்று இயங்கவுள்ளது.

✱ கடந்த வருடம் போன்றே இம்முறையும் வீதித் தடைகள் நிறுவப்படும். அவை பற்றிய விவரம் வருமாறு:-

1) மாநாகர சபை அலுவலகம் முன்பாக பருத்தித்துறை வீதியில் -
2) செட்டித் தெரு வீதியில் -
3) பிராமணக்கட்டுக்குளம் -
4) அரசடிச் சந்தி -
5) சங்கிலியன் வீதி - கோயில் வீதிச் சந்தி
6) தூர்க்கா மணிமண்டபம் முன்பாக
7) செட்டித்தெரு வீதி - பருத்தித்துறை வீதிச் சந்தி
8) நல்லை ஆதீனத்திற்கு பின்புறம்
9) கோயில் வீதியில் ஐ.நா. தூதரகத்தின் முன்பாக

✱ இதேவேளை- நல்லூர் ஆலயச் சூழலில் வீதி வெளிச்சத்தை வழங்க மின்சாரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தக் கூட்டத்தில் தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள், சமய நிறுவனப் பிரதிநிதிகள், மாநகர சபையின் பகுதித் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (1-13-ரி)

# பொலீஸாரின் பணி இருக்காது

யாழ்ப்பாணம், ஜூலை24

நல்லூர் பெருந்திருவிழாவில் பாதுகாப்பு ஒழுங்குகளை தொண்டு நிறுவனங்களே மேற்கொள்ளும். பொலீஸார் பணியில் ஈடுபடமாட்டார்கள் என்று மாநகரசபை ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

இதுவிடயமாக அவர் மேலும் தெரிவித்ததாவது-

இம்முறை ஆலயச் சூழலில் பாதுகாப்பு ஒழுங்குகளை நடைமுறைப்படுத்துவதற்கு பொலீஸாரை ஈடுபடுத்துவது சாத்தியமற்றது. அதற்குப் பதிலாக சாரணர் இயக்கம், சென்.ஜோன்ஸ் படைப்பிரிவு போன்ற அமைப்புகளின் தொண்டர்களும் மாநகரசபைப் பணியாளர்களும் கடமைகளில் ஈடுபடுவர்.

பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடும் தொண்டர்களுடன் முரண்படுவதைத் தவிர்த்துக்கொள்வதுடன் முரண்பாடுகளை சுமுகமாகத் தீர்க்கவும் முயல வேண்டும். 'எங்களின் ஆலயங்களை நாங்களே பரிபாலிக்கவேண்டும்' என்ற பொறுப்புணர்வுடன் அனைவரும் இணைந்து செயற்படவேண்டும் - என்றார். அவர்.

(1-13-ரி)

# உலக வங்கி உதவியுடன் வீடமைப்பு; 2,000 பேருக்கு முதற்கட்டக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ்.மாவட்டத்தில் உலக வங்கி நிதியுதவியுடன் வீடமைப்பதற்கு தெரிவு செய்யப்பட்ட 3 ஆயிரம் பயனாளிகளில் 2 ஆயிரத்து 24 பேருக்கு முதற்கட்டக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன என யாழ்.மாவட்ட பிரதிப் பணிப்பாளர் வே.சாம்பசிவம் தெரிவித்துள்ளார்.

ஏனையயோர்களுக்கான கொடுப்பனவுகள் மீள் பரிசீலனையின் பின்னர் வழங்கப்படுமென்று அவர் தெரிவித்தார்.

வேலணையில் 100 பேருக்கும் சங்கானையில் 347 பேருக்கும் சாவகச்சேரியில் 272 பேருக்கும் சண்டிலிப்பாயில் 101 பேருக்கும் கோப்பாயில் 635 பேருக்கும் ஊர்காவற்றுறையில் 36 பேருக்கும் காரைநகரில் 68 பேருக்கும் உடுவிலில் 58 பேருக்கும் கரவெட்டியில் 75பேருக்கும் நல்லூரில் 153 பேருக்கும் நெடுந்தீவில் 19 பேருக்கும் தெல்லிப்பழையில் 159 பேருக்கும் முதலாம் கட்டக் கொடுப்பனவாக தலா 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட் டுள்ளது.

இதேவேளை- 170 பேருக்கு இதுவரை 2 ஆம் கட்டக்கொடுப்பனவாக தலா 60 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(1 13)

# திருச்சொரூப பவனிக்கு படையினர் அனுமதி

மண்டைதீவு,ஜூலை24

மண்டைதீவு புனித சம்பேதுரு வானவர் ஆலய திருச்சொரூப பவனி படையினரின் பிரதேசத்தினூடாக செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1995ஆம் ஆண்டு இடம்பெயர்வுக்குப் பின்னர் படையினர் வசம் உள்ள பகுதி ஊடாக சொரூப பவனி செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

அதி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள இந்த ஆலயத்தின் திருவிழாக்கள் நடைபெறுவதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரே அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இந்த ஆலய நவநாள் ஆராதனைகள் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின. தொடர்ந்து 11 நாள்கள் உற்சவம் நடைபெறவுள்ளன.

அடுத்த மாதம் இரண்டாம் திகதி வெஸ்பர் தின விழாவும் மறுநாள் திருச்சொரூப ஆராதனை, திருச்சொரூப பவனி என்பனவும் இடம்பெறும்.

திருப்பலி பூசைகளைப் பங்குத் தந்தை அருட்திரு. அமலதாஸ் அடிகளார் ஒப்புக்கொடுப்பார். (203-88)

# வில்லூன்றியில் இன்று தீர்த்தம்

யாழ்ப்பாணம்,ஜூலை24

ஆடி அமாவாசை தினமான இன்று திங்கட்கிழமை வில்லூன்றியில் தீர்த்தம் இடம்பெறவுள்ளது.

காலை 7 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் 8.15 மணிக்குத் தீர்த்தவாரியும் 9 மணி தொடக்கம் 10.30 மணிவரை தீர்த்தக் கட்டடத்தில் அனுக்கிரகமும் நடைபெறும்.

தொடர்ந்து முற்பகல் 10.30 மணிக்கு சுவாமி கோயிலுக்கு எழுந்தருளுவார். காலை 8.15 மணிக்குத் தீர்த்தவாரி முடிந்தவுடன் பொதுமக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த்தர்ப்பணங்கள் செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வில்லூன்றித் தேவஸ்தான பரிபாலன சபையினரும் தர்ம பரிபாலன சபையினரும் தெரிவித்துள்ளனர்.

(1-203)

# ஆடி அமாவாசை விரதமும் அதனால் வரும் பலாபலன்களும்

**இன்று ஆடி அமாவாசை. இதையொட்டி இந்த ஆக்கம் வெளிவருகின்றது.**

எம்மைவிட்டுப் பிரிந்த எம்முன்னோரை நினைவுகூரவும் அவர்களது ஆன்மசாந்திக்காக பிரார்த்திக்கவும் விரதமிருந்து அதன்மூலம் நமது சந்ததி தழைத்தோங்க வழிவகுக்கும் ஒரு புனிதமான விரதநாள்தான் ஆடி அமாவாசை

தந்தையை இழந்தவர்கள் ஆடி அமாவாசையன்று தீர்த்த சங்கற்பம் செய்து சமுத்திரத்தில் அல்லது சமுத்திரத்தோடு இணைந்த புண்ணிய நீர் நிலைகளில் தீர்த்தமாடுவர். தீர்த்த நீரை இறைவனது அருள் நீராக எம் பாவங்களைக் கழுவும் புனித நீராக நினைத்து நம் முன்னோரை மனத் திருப்தியுடன் அவர்களது பாவங்கள் அகன்று அவர்களுக்கு நற்பேறுகிடைக்கவேண்டுமென இறைவனை வேண்டித் தீர்த்தமாடுவர்.

தீர்த்தமாடிய பின்னர் எள்ளும் நீரும் கொண்டு பிதிர்த்தர்ப்பணம் செய்வர். தர்ப்பணத்தில் எள்ளும் தர்ப்பைப் புல்லும் முக்கிய இடம் வகிக்கின்றன. இவை இரண்டும் விஷ்ணுவின் உடலிலிருந்து தோன்றியதாகக் கூறப்படுகின்றது. கெட்டதேவதைகளுக்கு விஷ்ணு பரம எதிரி எனவும் எள்ளைப் பயன்படுத்துவதன் மூலம் கெட்ட தேவதைகளால் உண்டாகும் இடர்ப்பாடுகள் நீங்கும் என்றும் கூறப்படுகின்றது.

குடும்பத்தில் இறந்துபோனவர்களின் ஆன்மாக்களை நற்கதி அடைவிக்கச் செய்யும் அவசியமான கடமையாக இது கருதப்படுகின்றது.

ஆடிஅமாவாசை தினத்தன்று இயன்றளவு தான தருமங்கள் செய்வதும் முக்கியமாகும். பிதிர்க்கடன்களைத் தீர்ப்பதற்குப் புனித தீர்த்தங்களாக சரித்திரப் பிரசித்திபெற்ற திருக்கேதீச்சரத்துப் பாலாவி, திருக்கோணேஸ்வர பாவநாசதீர்த்தம், நகுலேஸ்வரத்து கீரிமலைத் தீர்த்தம் ஆகியன புனிதமான தீர்த்தங்களாகும்.

சமுத்திரங்களில் பிதிர்க்கடன் தீர்க்க முடியாதவர்கள் ஆலயங்களுக்கு அருகே உள்ள ஆற்றங்கரைகளிலும் பிதிர்க்கடன்களைத் தீர்ப்பது வழமை.

சூரியனைத் தந்தைக்குரியவனாகவும் சந்திரனைத் தாய்குரியவனாகவும் கொள்வது சூரியனும் சந்திரனும் ஒன்றுபட்டுப் பூமிக்கு நேரே சந்திக்கும் நாள்கள் நம் தந்தைவழி முன்னோரை நினைவுகூர்வதற்கு ஏற்றநாள்களாகின்றன. இந்நாள்களே அமாவாசை தினங்கள். இவற்றினுள்ளே ஆடிமாதத்து அமாவாசை மிகச் சிறந்ததாகக் கொள்ளப்பட்டு விரதம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

- சாரங்கா -

## நாளை

ஆடி - 09
செவ்வாய்க்கிழமை
25.07.2006
திதி : அமாவாசை
முற்பகல்: 10.42
நட்சத்திரம் : பூசம்
பின்னிரவு : 03.36
சுபநேரம் : 10.32 - 12.02
ராகுகாலம் : 00.02 - 04.32

## உதயவாக்கு

நட்புக் கொள்வதற்கு முன் தீர்க்கமாக யோசித்துச் செய்வாயாக அந்த நட்பை தவிர்க்கவிரும்பின் இன்னும் தீர்க்கமாக யோசிப்பாயாக. -பெஞ்சமின் பிராங்லின்

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, லண்டனில் குடியுரிமை பெற்ற, 1974ஆம் ஆண்டு, ஆயிலியம் 4ஆம் பாதம் நட்சத்திரத்தை உடைய லக்கினத்தில் செவ்வாய் உடைய 5'6'' உடைய தொழில் அதிபருக்கு **A/L** படித்த, அழகிய மணமகள் தேவை. தொடர்பு: 0776080710 (52545)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 35 வயதுடைய, **Engineering (phd)** 8இல் செவ்வாய், கிரக பாவம் கூடிய தற்போது **U.S.A.** இல் **Consultant** ஆக பணிபுரியும் மணமகனுக்கு அழகான 30 வயதுக்குட்பட்ட டாக்டர் **or** பொறியியலாளர் மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2918, மே/பா உதயன். (52541)

## மணமகன் தேவை

1974இல் பிறந்த, கேட்டை நட்சத்திரம், 7இல் செவ்வாய் உள்ள, 44 கிரகபாவம் கொண்ட பட்டதாரி ஆசிரியை மணமகளுக்கு அரச தொழிலில் மணமகனை எதிர்பார்க்கின்றோம். தொடர்பு: **T.P.:** 0779877337 (52544)

## தவறிவிட்டது

48, கோணாவளை லேன், கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த T.ஜெயராஜசிங்கம் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம் நாவலர் றோட்டிற்கும், திருநெல்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது. தொடர்பு: 115, அரசடி வீதி, இலங்கை மின்சார சபை, நகரப் பகுதி. 0779658433 (52552)

சாரையடி, புலோலி தெற்கு, புலோலியைச் சேர்ந்த அரியரட்ணம் மயூரானந்தன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (871832200**V**) 17.07.2006 அன்று யாழ். நகரப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அடையாள அட்டையைக் கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைக்கவும். **S.**அரியரட்ணம் (**P.M.**), தபாலகம், யாழ்ப்பாணம். **T.P.:** 222 5014 (52558)

## வீடு வாடகைக்கு

சகல வசதிகளும் கொண்ட இரு மாடி வீடுகள் கோயில் வீதியிலும், நாலாம் குறுக்குத் தெருவிலும் உண்டு. தொடர்பு: 15**A**, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். **T.P.:** 222 3289 (52554)

## கண்ணீர்ப் பூக்கள்



### திருமதி சுந்தரம் செல்லத்துரை

ஏழாலை வசந்தபுர நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான ஆரம்பகால அன்னையே!
உன்போல் தாய் எங்கும் உண்டோ?
வையகத்தில் பல ஆயிரம் கோடியில் ஒரு தாய் தான் உன்போல் இருக்கமுடியும்.
உன் சுந்தர முகத்தை இறுதியில் காணமுடியாத பாவிகளாகிவிட்டோம்.

அம்மன் பக்தர்கள்,
கௌரி குடும்பம் (ஊரெழு), பிரான்ஸ்.

(52543)
(24-17-14)

## உதவிப் பணம் கொடுப்பனவு

வரணிப் பிரதேசத்தில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கான ஜூலை மாதக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுவருகின்றன.

கொடுப்பனவுகளைப் பெறுபவர்கள் கொடிகாமம் அஞ்சலகத்திலோ அல்லது மிருசுவில், வரணி, மந்துவில், கச்சாய், விடத்தற்பளை உப அஞ்சலகங்களிலோ நாளைக்கு முன்னர் அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (204)

## ஆடிச் செவ்வாய் திருவிழா

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் இரண்டாவது வார ஆடிச் செவ்வாய் திருவிழா நாளை காலை 6 மணிக்கு விசேட பூசைகளுடன் நடைபெறவுள்ளது.

முற்பகல் 11.30 மணிக்கு அம்பாள் திருவீதியுலா வருவார். தொடர்ந்து அன்னதான நிகழ்வு இடம்பெறும். (203-86)

## தையல் வகுப்புகள்

தையல், ஐசிங், சாறி வேக், பொக்கே என்பன பழக விரும்புவோர் தொடர்புகொள்ளவும்.

**ஆரம்பம்: 10-08-2006**

**அம்மன் தையல் நிலையம்,**
டச்சு வீதி, சாவகச்சேரி.

(52553)(24-17-14)




### உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 301217827 முதல் 301233535 வரை. சீட்டிழுப்பு இல. 1729 திகதி 22-07-2006

வெற்றி எண்கள்: **16 21 40 43**  சுப்பர் இல. **04**

ஜக்பொட் பரிசு ரூ. **4,335,700/-** வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இல. + சுப்பர் இல. | 0 | 4,335,700/- | - |
| 4 இல. | 0 | 1,000,000/- | - |
| 3 இல. + சுப்பர் இல. | 25 | 5,000/- | 125,000/- |
| 3 இல. | 435 | 1,000/- | 435,000/- |
| 2 இல. + சுப்பர் இல. | 1354 | 500/- | 677,000/- |
| 2 இல. | 20366 | 40/- | 814,640/- |
| 1 இல. + சுப்பர் இல. | 19258 | 20/- | 385,160/- |
| 1 இல. | 289264 | 10/- | 2,892,640/- |
| மொத்தம் | | | 5,329,440/- |
| தங்க நகை, தையல் இயந்திரம் மற்றும் சைக்கிளின் பெறுமதி | 5 | 120,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 330,707 | | 5,929,440/- |

ரூ. 120,000 பெறுமதியான தங்க நகை, தையல் இயந்திரம் மற்றும் சைக்கிளை வெற்றி பெற்ற 05 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கண்டி | 301228703-1-08 |
| பதுளை | 301226219-9-13 |
| மொனராகலை | 301224242-7-73 |
| குருணாகல் | 301222735-8-88 |
| அம்பாறை | 301227389-4-88 |

தொடர் இல. 301316046 க்கு மேற்பட்ட ஜாதா நிற டிக்கட்டுகள் 2006 ஜூலை 26 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

**ரூ. 5,108,250/-**

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

## 9ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
### வீரகத்தி இராசதுரை (பூச்சி)



தோற்றம் 1934-12-27 மறைவு 1997-08-03

ஓடி மறைந்ததப்பா ஒன்பதாண்டுகள்
பாவியந்த கொடியகாலன்
பறித்தனனே உம் உயிரை
தேடித்திரிகின்றோம் - உம்
திருமுகம் காண்பதற்கு
நாடி வந்திடப்பா - நாம்
ஒன்றாய் வாழ்ந்திடலாம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

முத்தமிழ் வீதி, கொட்டடி,
யாழ்ப்பாணம்.

(52551) (24-17-14)

## சலுகைக் கட்டணத்தில் THAMPI விமானப் பயணச் சீட்டுக்கள்

(உள்நாடு மற்றும் சர்வதேச நாடுகளுக்கு)

★ யாழ். - கொழும்பு - யாழ்.
இருவழிப் பயணச் சீட்டு 11,250.00
★ இந்தியா (இருவழி) 17,750.00

*மற்றும் ஏனைய சர்வதேச நாடுகளுக்கும் சலுகைக் கட்டணத்தில் பயணச்சீட்டுகள்*

• தலைமை அலுவலகம்
THAMPI HOLDINGS (PTE) LTD
177, Old moor street, Colombo - 12. T.P.: 011 2343126

• கிளை வெள்ளவத்தையில்
296/B4, Galle Road, Wellawatte. T.P.: 011 2360959, 071 4353080

• யாழ். நகரில்
90, Kanthappasegaram Road, Jaffna
T.P.: 021 222 2823, 021 222 2504, 071 4353073

**HOTLINE - 0777382343**

(52523)(24-17-14)

## விண்ணப்பம் கோரல்

### பதவி வெற்றிடம்

**1. பொறியியலாளர்**

தகைமைகள்:
- *சிவில் பட்டப்படிப்பு முடித்திருத்தல் வேண்டும்*
- *பொறியியல் துறையில் 05 வருடத்திற்கு மேல் வேலை அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.*

**2. தொழில்நுட்ப உத்தியோகத்தர்**
- N.D.T. *பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.*
- *05 வருடத்திற்கு மேல் வேலை அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.*

சம்பளம்:
*பேசித் தீர்மானிக்கப்படும்.*
*முழு நேரமாகவோ / பகுதி நேரமாகவோ கடமை மேற்கொள்ளலாம்.*

**விண்ணப்ப கால முடிவு திகதி: ஜூலை 30**

மேற்கூறிய தகைமையை உடையவர்கள் தங்களது சுயவிவரப் படிவத்தைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**பொருண்மிய மதியுரையகம்,**
**இரணைமடு, கிளிநொச்சி.**

(சி/50355)(24-17-14)

## வாகனம் தேவை

**Action Contre la Faim (INGO)** *யாழ். கிளைக்குக் கீழ்க் குறிப்பிட்ட ரக வாகனம் ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்குத் தேவை.*

- **DOUBLE CAB CANTER (The most preferable)**
  (பயணிகளையும் பொருள்களையும் ஏற்றிச்செல்லக்கூடியது)
- **SINGLE CAB CANTER (preferable)**
  (பின்புறம் மூடியது)

*உரியவர்கள் 7 நாள்களுக்குள் தொடர்புகொள்ளவும். ஏனையவை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.*

**தொ.பே.இல.: 021 222 2465 / 6993**
**இல. 40, நக்கா லேன், கண்டுக்குளி,**
**யாழ்ப்பாணம்.**

(சி/50354)(24-17-14)

## கொடிகாமம் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் வளர்ப்பு நாய்களிற்கான தடுப்பூசி வழங்கல்

கொடிகாமம் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் எதிர்வரும் 24ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதிவரை வளர்ப்பு நாய்களுக்கான விசர்நோய்த் தடுப்பு மருந்து ஏற்றப்பட இருக்கிறது.

மேற்படி தடுப்பூசி போடும் இடங்கள் தொடர்பான விவரங்கள் பின்வருமாறு:-

01. திங்கள் - 24.07.2006: விடத்தற்பளை, கேடில்ஸ் நகர், கெற்பேலி
02. செவ்வாய் - 25.07.2006: உசன், தவசிகுளம், மிருசுவில்
03. புதன் - 26.07.2006: படித்தமகளிர் குடியேற்றத்திட்டம், மன்னன்குறிச்சி, மிருசுவில் வடக்கு
04. வியாழன் - 27.07.2006: தவசிகுளம் - கொடிகாமம், மிருசுவில் தெற்கு, நாவலடி.
05. வெள்ளி - 28.07.2006: பாலாவி, வாகையடி, வெள்ளாம்போக்கட்டி
06. சனி - 29.07.2006: கச்சாய் வடக்கு, தவசிகுளம் - கொடிகாமம்.
07. திங்கள் - 31.07.06: கொடிகாமம், ஐயனார் கோயிலடி, எருவன்.

தகவல்:
**கு.சுதாகரன்**
பொதுச்சுகாதார பரிசோதகர்,
கொடிகாமம்.

(சி/50366)
(24-17-14)

## சிரமதானப் பணி

சாவகச்சேரி நகர சபையினால் அனுஷ்டிக்கப்படும் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் சாவகச்சேரி நகரப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை லயன்ஸ் கழகத் தலைவர் லயன் வ.ஸ்ரீபிரகாஸ் தலைமையில் சிரமதானப் பணியை மேற்கொண்டனர். (202-117)

## ப.நோ.கூ. சங்க பணியாளருக்கு இன்று விடுமுறை

அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு ஆடி அமாவாசை தினத்தன்று வழமை போன்று இம்முறையும் விடுமுறை வழங்கப்படும் என்று சங்கத்தின் பொதுமுகாமையாளர் ரி.கவிந்திரதாஸ் தெரிவித்தார்.

இதனால் அன்றையதினம் சங்கத்தின் பணிகள் எதுவும் இடம்பெறாது என்றும்' அவர் மேலும் தெரிவித்தார். (17)

# STUDY IN INDIA

## K. L. College of Engineering affiliated to Acharya Nagarjuna UNIVERSITY (Andra Pradesh)

| ENGINEERING COURSES | DURATION | G.C.E (A/L) PASSES NEEDED |
|---|---|---|
| B.E. Information Science &Technology | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Computer Science & Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Electronics & Communication Eng | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Mechanical Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Civil Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Industrial & Production Eng. | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Electrical & Electronics Eng | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Electrical & Computer Eng. | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |

## Muthayammal College of Arts & Science affiliated to Periyar UNIVERSITY (Salem)

| COURSES | DURATION | G.C.E (A/L) PASSES NEEDED |
|---|---|---|
| B.Sc (Computer Science) | 3 Year | Math, Physics & Statistics |
| B.Sc (Fashion & Apparel Design) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.Sc (Microbiology) | 3 Year | Chemistry and Biology |
| B.Sc (Genetics) | 3 Year | Chemistry, Physics, Biology, Zoology, Botany |
| B.Sc (Biotechnology) | 3 Year | Chemistry, Physics & Biology |
| BCA (Bachelor of Computer Applications) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| BBM (Bachelor of Business Mang'nt) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| BHM (Bachelor in Hotel Management) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.A (Journalism) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.Com | 3 Year | Pass in All Subjects in any discipline |

**We have sent past students of:** St. Cecilias (Batti), Vincent Girls (Batti), St. Patrick's (Jaffna), St. John's (Jaffna), Central (Jaffna), Kokkuvil Hindu, Jaffna Hindu, Chavakachcheri Hindu, St. Michaels' (Batti), Hartley (Point Pedru), Jaffna College (Vaddukoddai), Vavuniya MV.

**M.B.B.S**
Admissions in INDIA

**O/L** மட்டும் முடித்த மாணவர்கள் இந்தியாவில்
Pre-University (Foundation Course)
* Arts and Science (2 years)
* Engineering (3 years)
கற்கைநெறியை முடித்து மேலும் 3 வருடங்களில் Graduate / Engineer ஆக வாய்ப்பு

2006 A/L students can enrol with pending results

**SCHOLARS INFORMATION CENTER**
2nd Floor, 50, Galle Road, Colombo 6.
Call: 0777-767818 / 0114-512591

# முரளிதரனைப் பார்த்தே பயப்படுகின்றோம் - பிரின்ஸ்

கொழும்பு,ஜூலை24

முத்தையா முரளிதரன்தான் தங்களிற்கு மிகப்பெரிய சவாலாக இருக்கப்போகிறாரென தென்னாபிரிக்க அணித்தலைவர் அஸ்வெல் பிரின்ஸ் கூறியுள்ளார். இலங்கையணி துடுப்பாட்ட வீரர்கள் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பியிருந்தாலும் தாங்கள் முரளியின் பந்து வீச்சை எண்ணிப் பயப்படுகின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் டெஸ்ட் ஆட்டங்களில் இதுவரை 635 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். தென்னாபிரிக்க அணிக்கு எதிராக 13 ஆட்டங்கள் விளையாடியுள்ள முரளி 23.34 எனும் சராசரிக்கு 82 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். சொந்த மண்ணில் 7 ஆட்டங்களில் 47 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார்.

இங்கு வந்துள்ள தென்னாபிரிக்க அணி இரண்டு ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. இத்தொடரிற்கான கிண்



செய்தியாளர் மாநாட்டில் பிரின்ஸ்

ணத்தினை இரு அணித் தலைவர்களும் அறிமுகம் செய்து வைத்தனர். அதன் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துக் கூறிய பிரின்ஸ்:-

''தற்போது இலங்கை அணி தனது அதீத திறமையை வெளிக்காட்டி வருகின்றது. அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தன, குமார் சங்ககார, சனத் ஜெயசூரியா ஆகியோர் மீண்டும் பிரகாசிக்கத் தொடங்கியுள்ளமை அவ்வணிக்குக் கூடுதல் பலமே. ஆனால் நாங்கள் பயப்படுவதெல்லாம் முரளிதரனின் பந்து வீச்சிற்குத்தான்.'' என்று கூறினார்.

முன்னணி வீரர்கள் சிலர் இல்லாமல் வந்திருந்தாலும் இலங்கையணியை வீழ்த்துவோம் என்ற நம்பிக்கை தனக்கு உள்ளதாகவும் பிரின்ஸ் மேலும் தெரிவித்துள்ளார். ''முன்னர் நடந்த தொடர்களிலிருந்து சில படிப்பினைகளை நாங்கள் கற்றுக் கொள்ள வேண்டும். சில முன்னணி வீரர்கள் இல்லாமல் வந்துள்ளோம். எனினும் அவர்கள் கடந்த காலங்களில் தொடரை எவ்வாறு எதிர்கொண்டார்கள் என்று நாங்கள் பார்க்க வேண்டும். அதிலிருந்து நாங்கள் சில விடயங்களைக் கற்றுக் கொண்டு தொடரை வெல்ல முயற்சிக்கவேண்டும். இலங்கை அணிக்கு கடும் நெருக்கடி கொடுப்போம். கிரேம் சிமித்திற்குப் பதிலாக இடம்பெற்றுள்ள ருடோல்ப் சிறப்பாகச் செயற்படுவார். அது போலவே அனுபவ வீரர் ஹேர்சல் கிப்ஸும் வெற்றிக்குத் துணை நிற்பார்'' என்றும் தெரிவித்தார்.

## பயிற்சிக்குச் சென்ற வீரர்கள் திரும்பினர்

தேசிய மட்டத்தில் நடைபெறவுள்ள போட்டிகளில் கலந்துகொள்வதற்கு கொழும்பில் நடைபெறும் ஆரம்பப் பயிற்சிகளில் கலந்துகொண்டிருந்த யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த வீர வீராங்கனைகள் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளனர்.

கொழும்பில் நிலவும் பாதுகாப்பு நெருக்கடிகளும் அசாதாரண சூழ்நிலையுமே அவர்கள் யாழ். வந்தமைக்கு காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

தேசிய மட்டத்தில் நடைபெறவுள்ள கிரிக்கெட், வலைபந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகளில் பங்குபற்றவுள்ள யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து மாணவர்கள் கொழும்பில் பயிற்சிகளை பெற்று வந்தனர்.

பயிற்சிகளில் ஈடுபட்டுவந்த சமயம் கொழும்பில் இளைஞர், யுவதிகள் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து தமது பயிற்சிகளை இடைநிறுத்திவிட்டு அவர்கள் திரும்பியுள்ளனர். (1-203-86)

**விளையாட்டு**



இலங்கை-தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் எதிர்வரும் வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. இதற்கான பயிற்சிகளை இலங்கை அணிகொழும்பு எஸ். எஸ்.சி விளையாட்டரங்கில் மேற்கொண்டிருக்கின்றது. இலங்கை அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன மற்றும் பந்துவீச்சாளர் லசித் மலிங்க ஆகியோர் பயிற்சியில் ஈடுபட்டுள்ளதைப் படத்தில் காணலாம்.

## 'சார்க்' விளையாட்டுப் போட்டியை 20 யாழ்.மாணவர்கள் பார்க்க வாய்ப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 24

தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளைப் பார்வையிடுவதற்கு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 20 மாணவர்களுக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி தமது அதி உச்சத் திறமைகளை வெளிப்படுத்திய 15, 18 வயதுக்குட்பட்ட 20 மாணவ, மாணவியருக்கு இந்த வாய்ப்புக் கிட்டியுள்ளது.

தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் ஓகஸ்ட் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ளன. இது 10 ஆவது விளையாட்டுப் போட்டியாகும்.

இந்தப் போட்டியைப் பார்வையிட ஒவ்வொரு வலயத்திலும் இருந்து ஐவர் தெரிவு செய்யப்படவிருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து செல்லும் மாணவர்களின் போக்குவரத்துக்கு ஒழுங்குகள், தங்குமிட வசதிகள் போன்றவற்றை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட நிறுவனம் செய்துகொடுக்கவுள்ளது என்று நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் பிரியா தெரிவித்துள்ளார். (1-203-190)

## மேசைப்பந்தாட்டப் போட்டியில் யூனியன் தேசிய மட்டத்துக்குத் தெரிவு

வலி.வடக்கு,ஜூலை24

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையே இடம்பெற்ற போட்டிகளில் மேசைப்பந்தாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி இரண்டாமிடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிகளில் பங்குப்பற்றத் தகுதிபெற்றுள்ளது.

வவுனியா கல்வியியற் கல்லூரியில் இடம்பெற்ற இப்போட்டிகளின் இறுதியாட்டத்தில் திருகோணமலை சிங்கள வித்தியாலயமும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மோதிக் கொண்டன.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட தனிநபர் போட்டிகளாக நடைபெற்ற இப்போட்டிகளில் முதல்சுற்றில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வெற்றிபெற்றது.

22:17 என்ற புள்ளியில் வெற்றிபெற்ற யூனியன் கல்லூரி அடுத்த இரண்டு சுற்றுகளிலும் தோல்விகளைத் தழுவிக்கொண்டது.

திருகோணமலை சிங்கள வித்தியாலயம் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டதையடுத்து யூனியன் கல்லூரி இரண்டாமிடத்தைப் பெற்றது.

யூனியன் கல்லூரி சார்பில் இரட்டையர்களாக தர்மராசா அபிதா, தர்மராசா அனிதா ஆகியோருடன் செல்வராசா திருமகளும் போட்டிகளில் கலந்துகொண்டனர். (1-203-86)

## மருதங்கேணிக் கல்விக் கோட்டத்தில் உள்ள 5 பாடசாலைகளில் விளையாட்டு முற்றங்கள்

### டென்மார்க் செஞ்சிலுவை அமைத்துக்கொடுத்துள்ளது

வடமராட்சிகிழக்கு,ஜூலை 24

மருதங்கேணி கோட்டத்திலுள்ள ஐந்து பாடசாலைகளுக்கு டென்மார்க் செஞ்சிலுவைச் சங்கம் விளையாட்டு முற்றத்தினை அமைத்துக்கொடுத்துள்ளது.

மருதங்கேணி கோட்டத்தில் உள்ள வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா கனிஷ்ட வித்தியாலயம், ஆழியவளை சி.சி.தமிழ்க்கலவன் பாடசாலை, உடுத்துறை மகாவித்தியாலயம், மருதங்கேணி இந்து தமிழ்கலவன் பாடசாலை, கேவில் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளிலேயே இவ்விளையாட்டு முற்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் பெரு விளையாட்டுக்களான கால்பந்து, கரப்பந்து, வலைபந்து ஆகியவற்றுக்கான விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இப்பாடசாலைகளில் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் மாணவர்களுக்கான சமூக உளவியல் பயிற்சி வகுப்புக்களும் டென்மார்க் செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் மாலை நேரங்களில் வாரத்தில் இரு நாள்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இப்பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படும் நாள்களில் இவ்வகுப்புகளில் கலந்துகொள்ளும் 6ஆம், 7ஆம் 8ஆம் தர மாணவர்களுக்கு மதிய உணவும் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (1-182)

## மினி உலகக் கிண்ணத் தொடரிற்கான அணிகளை அறிவிக்க ஐ.சி.சி.கோரிக்கை!

டுபாய், ஜூலை 24

மினி உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரில் பங்கேற்கும் அணி வீரர்களின் பட்டியலை செப்ரெம்பர் 7 ஆம் திகதிக்குள் அறிவிக்குமாறு சர்வதேச கிரிக்கெட் சபை உத்தரவிட்டுள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் மினி உலகக்கிண்ணத் தொடர் இந்த ஆண்டு இந்தியாவில் ஒக்ரோபர் 7ஆம் திகதி முதல் நவம்பர் 5ஆம் திகதி வரை நடைபெற உள்ளது. இத் தொடரின் ஆட்டங்கள் மும்பை, ஜெய்ப்பூர், அகமதாபாத் மற்றும் மொகாலியில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் இத்தொடரிற்கான 30 வீரர்கள் கொண்ட பட்டியலை எதிர்வரும் ஓகஸ்ட் 7ஆம் திகதிக்குள் அறிவிக்க வேண்டுமென்றும், அதிலிருந்து 14 பேர் கொண்ட இறுதிப் பட்டியலை செப்ரெம்பர் 7ஆம் திகதிக்குள் வெளியிட வேண்டுமென்றும் ஐ.சி.சி. உத்தரவிட்டுள்ளது. மேலும், முதல் முறையாக அணிகள் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. பிரிவு 'ஏ'யில் இந்தியா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து மற்றும் தகுதிச் சுற்றில் இரண்டாம் இடம் பெறும் அணியும், பிரிவு 'பி'யில் தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், நியூஸிலாந்து மற்றும் தகுதிச்சுற்றில் முதலிடம் பெறும் அணியும் சேர்க்கப்படும். தகுதிச்சுற்று ஆட்டங்களில் ஐ.சி.சியின் ஒரு நாள் தரவரிசையில் ஏழு முதல் பத்து இடங்களைப் பிடித்துள்ள மேற்கிந்தியத் தீவு, இலங்கை, சிம்பாப்வே மற்றும் பங்களாதேஷ் அணிகள் இடம் பெற்றுள்ளன. தகுதிச்சுற்று ஆட்டங்கள் ஒக்ரோபர் 7ஆம் திகதி முதல் 14ஆம் திகதிவரை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## அஸ்ரா கிண்ணக் கிரிக்கெட்டில் சென்றல் வென்றது

யாழ்ப்பாணம், ஜூலை24

யாழ். மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்படும் அஸ்ரா கிண்ணத்திற்கான 15 வயதிற்குட்பட்டவர்களான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கடந்த புதன்கிழமை யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றது.

யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 260 ஓட்டங்களைப் பெற்றது.

ஜெனேசன் ஆட்டம் இழக்காமல் 110 ஓட்டத்தையும் கோபிகன், ஜேம்ஸ்சான்சன், எட்வேட் எடின், யஸ்ரின் ஆகியோர் முறையே 25, 33, 45, 20 ஓட்டங்களை தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

சயித், நிரோஜன் முறையே தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணியினர் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 47 ஓட்டங்களைப் பெற்றனர்.

யதுதாஸ், குமார் ஆகியோர் முறையே 15, 10 ஓட்டங்களை தமது அணிக்காக பெற்றுக்கொடுத்தனர். ஜெனேசன் 5 விக்கெட்டுக்களையும் ரதீஸன் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். யாழ். மத்திய கல்லூரி அணியினர் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியினரை தொடர்ந்து விளையாடுமாறு பணித்தனர்.

கொக்குவில் கல்லூரி அணியினர் 4 விக்கெட்டுக்களை இழந்து 53 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

யாழ். மத்திய கல்லூரி அணி முதல் இனிங்ஸில் கூடுதல் ஓட்டங்கள் பெற்றதால் அதற்கு வெற்றி வழங்கப்பட்டுள்ளது. (1-190)



யாழ். மாவட்ட மட்டத்தில் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் மூன்றாம் இடங்களைப் பெற்றுக்கொண்ட சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் 15 வயதுப் பிரிவினரை முதலாவது படத்திலும் 19 வயதுப் பிரிவினரை இரண்டாவது படத்திலும் பாடசாலை அதிபர், ஆசிரியர்களுடன் காணலாம். இந்த அணியினர் மாகாண மட்டத்தில் நடைபெறவுள்ள போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர்.

## ஏழாலை தெற்கு வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்

**வரலக்ஷ்மி பூஜை**

**04.08.2006 வெள்ளிக்கிழமை**

முற்பகல் 10 மணிக்கு விசேட பூஜையுடன் ஆரம்பாகி வரலக்சுமி காப்பு வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.

(52530)(32-19-11) **-தேவஸ்தானம்.**

## நெஞ்சை விட்டு அகலாத முதலாம் ஆண்டு நினைவுகள்

**அமரர் ஜெயசீலன் சந்தறூபன்**



தாயின் மடியில் 25-06-1982 கயவர் அழிப்பில் 24-07-2005

நேற்றுவரை நீ நேரிலிருந்தாய்
கண்களிலே
பூத்தது போற் பூத்துப் புன்னகைத்தாய்
எங்களுடன்
பேசிக்களித்தாய் போய்விட்டாய்
எம்மைவிட்டு
ஈரவிழிகள் எமக்கின்னும்
காயவில்லையே
மீளாத்துயரில் மீண்டும் மீள
நீ வரமாட்டாயா றூபனே...!

எம்.எஸ்.லேன்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (52527)(32-19-11)

அன்பிரிவால் துடிக்கும்:
**அன்பு ஐயா, அம்மம்மா, நேசன் மாமா, அத்தை, மச்சான்மார்.**

## ஆசிரியர் பதவி வெற்றிடங்கள்

**யா/சிதம்பரக் கல்லூரி, வல்வெட்டித்துறை**

மேற்படி கல்லூரியில் பின்வரும் பாடங்களைப் போதிப்பதற்காக தகுதி வாய்ந்த ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. க.பொ.த (உ.த) உயிரியல்
2. ஆண்டு 6 - 9 வரையிலான வகுப்புகள்
   விஞ்ஞானம், சமூகக்கல்வி (ஆங்கில மொழி மூலம் கற்பிக்க)
3. ஆண்டு 6-11 உடற்கல்வி பாடநெறி (ஆண், பெண் இருபாலருக்கும்) குறிப்பாக பெண்கள் வலைப்பந்து, கரப்பந்து விளையாட்டுப் பயிற்சிகள் வழங்கக்கூடியவர்கள்.

குறிப்பு: மேற்படி பாடநெறிகளைப் போதிப்பதில் அனுபவமுடைய ஆசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (இளைப்பாறியவர்களும் விண்ணப்பிக்கலாம். தெரிவுசெய்யப்படுபவர்கள் உடனடியாகப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளவேண்டும்).

விண்ணப்பிக்க விரும்பும் ஆசிரியர்கள் தமது சுயவிவரக் குறிப்புடனான விண்ணப்பங்களை,

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
யா/சிதம்பரக் கல்லூரி,
வல்வெட்டித்துறை

அல்லது

அதிபர்,
யா/சிதம்பரக் கல்லூரி,
வல்வெட்டித்துறை

என்னும் முகவரிக்கு 31.07.2006இற்கு முன் உடன் அனுப்பி வைக்கவும்.

பழைய மாணவர் சங்கம்,
யா/சிதம்பரக் கல்லூரி,
வல்வெட்டித்துறை. (52514)(32-19-11)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூலை24

அளவெட்டி, காட்டுப்புலம் ஆதிகாளி யம்மன் ஆலயத்தின் வருடாந்த அலங்காரப் பெருந்திருவிழா கடந்த 18ஆம் திகதி ஆரம் பமாகி தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது.

எதிர்வரும் 28ஆம் திகதி பொங்கல் விழா இடம்பெறவுள்ளது. (13)

* * *

கரவெட்டி,ஜூலை24

வல்வை ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத் தீஸ்வரன் ஆலய வாலாம்பிகாதேவி பெருந் திருவிழா கடந்த 20ஆம் திகதி கொடியேற் றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின் றது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெற வுள்ள இந்தப் பெருந்திருவிழாவில் எதிர்வ ரும் 28ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 29 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெற வுள்ளன. (203-70)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை24

சண்டிலிப்பாய் கல்வளை ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

எதிர்வரும் 29ஆம் திகதி பொங்கல் விழா நடைபெறவுள்ளது. (13)

## கையடக்கத் தொலைபேசியும் பணமும் திருட்டு

வலி.தென்மேற்கு,ஜூலை24

சண்டிலிப்பாய் மேற்கில் வீடு ஒன்றிலி ருந்து இரவுவேளையில் கையடக்கத் தொலை பேசி ஒன்றும், 500 ரூபா ரொக்கப் பணமும் திருடப்பட்டுள்ளது.

கடந்த 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு வீட்டிலுள்ளோர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தவேளை, வீட்டின் யன்னல் வழியாக கைவிட்டு ஜன்னல் அருகிலிருந்த கைப்பை யினுள் இருந்த கைத்தொலைபேசியையும், பணத்தையும் அபகரித்துச்சென்றுவிட்டதா கத் தெரிவிக்கப்பட்டது. (எ-135)

## சிறப்புற நடைபெற்ற பாராட்டு விழா

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை யின் முன்னாள் செயலாளர் பி.விக்ரர், பண் டத்தரிப்பு பட்டின உப அலுவலக முன்னாள் பொறுப்பதிகாரி செல்வி அ.நாகேஸ்வரி, பயிலுநர் செல்வி அ.ஜீவனா, முன்பள்ளி ஆசி ரியை பொ.புஷ்பமலர் ஆகியோருக்கு சேவை நலன் பாராட்டு விழாவொன்றை கடந்த 14 ஆம் திகதி பண்டத்தரிப்பு பட்டின உப அலு வலகத்தினர் நடத்தினர்.

பட்டின உப அலுவலகத்தின் பொறுப் பதிகாரி ஞா.தேவச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில், பிரதம அதிதி யாக வலி.தென்மேற்கு பிரதேச சபையின் செயலாளர் மே.சாந்தசீலன் கலந்துகொண்டு உரையாற்றினார். நூலகர் எம்.வி.குணாளன் வரவேற்புரை நிகழ்த்தினார். பலராலும் பாராட்டுரைகள் நிகழ்த்தப்பட்டதுடன் அன்ப ளிப்பு வழங்கப்பட்டு பாராட்டுரைகள் நிகழ்த்தப்பட்டதுடன், மேற்படி முன்னாள் அலு வலர்கள் கௌரவிக்கப்பட்டனர். (எ-135)

## பெயர் மாற்றம்

இலகடி, காரைநகரைச் சேர்ந்த முருகையா திருக்குமார் ஆகிய நான் இன்றிலிருந்து (24.07.2006) எனது பெயரை **முருகையா மதுசன்** என மாற்றி உள்ளேன் என்பதை சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

இலகடி,
காரைநகர். (52369)(21.19)

உண்மையுள்ள
**M.மதுசன்**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
**செல்வநாயகி பொன்னுத்துரை**



தோற்றம்: 01.10.1947
மறைவு: 05.08.2005

நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து ஆண்டு
ஒன்று மறைந்தாலும்
உங்கள் பிரிவின் துயரத்தை ஆற்ற முடியவில்லை
உங்கள் சிரித்த முகம் எங்கள்
கண்முன்னே நிழலாடிக் கொண்டே உள்ளது

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்...

186, ஆசீர்வாதப்பர் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம். (52352)(21.19)

கலாபூஷணம்
**S. பொன்னுத்துரை**
Organ ஆசிரியர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 - 11 - 1965



மறைவு 24 - 07 - 2005

**அமரர் திருமால் விக்னேந்திரன்**

*திதி: ஆடிமாத அபரபக்க சதுர்த்தி 12.08.2006 (சனி)*

கண்ணில் மணியாய்த் திகழ்ந்தாய்
கனிவுடன் வார்த்தைகள் உதிர்த்தாய்
மண்ணில் மாண்புடன் வாழ்ந்தாய்
மதியொடு விளையாட்டிற் சிறந்தாய்
விண்ணில் கலந்து நிறைந்தாய்
விளங்கு தைமிட்டிப் பிள்ளையார் பாதம் சேர்ந்தாய்
எண்ணில் வருடம் ஒன்றுமதாய்
எம் செல்வக் குலக்கொழுந்தே.

என்றும் நின் கருணைத் திருவுருவம்
எங்கள் நெஞ்சில் நிலைத்திருக்கும்.

(52518)(32-19-11)

26, பார் றோட் (BAR),
மட்டக்களப்பு.

அம்மா, சகோதரர்கள், மாமாமார், மாமிமார், மைத்துனர், மைத்துனிகள், உறவினர் (பிள்ளையார் கோயிலடி, தைமிட்டி).

## 90ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 13 - 06 - 1969



அரக்கனின் துப்பாக்கி முனையில் 25 - 04 - 2006

**அமரர் தங்கராசா கமலோஜன்**

*(பாதுகாப்பு உத்தியோகத்தர், தொழில்நுட்பக் கல்லூரி)*

நினைக்க நினைக்க நெஞ்சம் வெகுதே!
வஞ்சகரின் செயலினால் உன் வாழ்வு
பறிபோனதோ!
ஓடி வருவாய் உன்
உறவுகளைக் காண
தேடி அழைக்கின்றோம் நித்தம்
ஓடி வந்திடுவாய்
நீ பழகிய பசுமையான நினைவுகள்
எம்மை விட்டு ஒரு போதும் அகலாதையா!

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

என்றும் உன் நினைவில்:


'கலாசாலை வீதி',
திருநெல்வேலி வடக்கு,
திருநெல்வேலி.
(52450)(21.19)

சித்தப்பா, அன்ரி, வளர்த்தம்மா, சின்னன்ரி, உன் சகோதரர்கள் -அக்கா ஜீவா, வதனி, வினோ, தம்பி - ஸ்ரீதரன், மச்சான்மார் -செல்வக்குமார், இராஜேஸ்வரன்.

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி காசிப்பிள்ளை சின்னம்மா**

அன்னை மடியில் 02.05.1935
அம்மன் திருப்பாதத்தில் 03.08.1997



அம்மா உன் பிரிவுத் துயரால்
ஆண்டுகள் எட்டு ஓடி மறைந்தாலும்
உங்கள் அன்பு முகம் மறந்திடுமா? மறைந்திடுமோ?
ஆண்டுகள் எத்தனை கடந்தாலும்- உங்கள்
நினைவலைகள் நெஞ்சை விட்டு நீங்கா[illegible]- அம்மா!
அன்பால் எம்மை வளர்த்தெடுத்த அம்[illegible]வ!
அன்பு முகம் பார்த்தே படுத்துறங்கிப் பழகியே நாம்
இப்போது தூக்கமின்றித் துடியாய்த் துடிக்கின்றோம்
எத்தனை யுகங்கள் மலரட்டும்- எம்
நெஞ்சமதில் உங்கள் ஞாபகம் நிலைத்திருக்கும்!
உங்கள் நினைவுகள் என்றும் சுகமானவையே!

**உங்கள் ஆத்மசாந்திக்காக**

இந்த ஆடி அமாவாசை நன்நாளில் வட்டுவினிப் பிள்ளையார், வட்டுவினி வைரவர், வட்டுவினி கண்ணகையம்மன், இணுவில் கந்தன் துணைவேண்டி பிரார்த்திக் கின்றோம்.

**பொ.காசிப்பிள்ளை** *(கணவர்)*, **பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், தம்பிமார், மைத்துனர்மார் மற்றும் உற்றார், உறவினர்கள்.**

**பொன்னப்பாபதி, வட்டுவினி லேன், இணுவில் மேற்கு.**

(கி.50352)
(39-32-19-11)

## ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது

# 5ஆயிரத்து 457 வீடுகள் அழிவடைந்தன; 676 வீடுகளே கட்டி முடிக்கப்பட்டுள்ளன!

### முல்லைத்தீவு மேலதிக அரச அதிபர் கவலை

அக்கராயன்,ஜூலை 24

ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக 5 ஆயிரத்து 457 வீடுகள் அழிவடைந்த நிலையில் தற்போது 676 நிரந்தர வீடுகளே அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கவலை தெரிவித்துள்ளார் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் கே.பார்த்தீபன்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமைக்கப்பட்டுவரும் நிரந்தர வீடுகளின் தற்போதைய நிலைவரம் தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

முல்லைத்தீவில் நிரந்தர வீடுகள் அமைக்கும் பணிகள் பல தடைகளுக்கு மத்தியில் இடம்பெற்று வருகின்றன.

கட்டடப்பொருள்கள் எடுத்துவருவதில் உள்ள இடர்களுக்கு மத்தியில் ஆறு மாத காலத்துக்குள் 3 ஆயிரம் நிரந்தர வீடுகள் அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் இடம் பெற்று வருவதாகவும் -

இதுவரை காலத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வீடுகளின் மீள்கட்டுமானப் பணியில் 676 வீடுகளே அமைக்கப் பட்டுள்ளன என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

(203-420)

## இறுவெட்டுகள் வெளியீடு

பரந்தன்,ஜூலை24

போராளி, இசையமைப்பாளர் அதிகமானின் இசையில் உருவான 'கடற்புலிகளின் பாகம் பத்து' போராளி இசைப்பிரியனின் இசையில் உருவான 'புதிதாய்ப் பிறக்கின்றோம்' ஆகிய இறுவெட்டுகள் வெளியிட்டு வைக் கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் நிதர்சனப் போராளி மீரா தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் வெளியீட்டுரையை விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை நிகழ்த்தினார்.

சிறப்புரையை கடற்புலிகளின் தளபதி விநாயகம் நிகழ்த்தினார்.

(352-203)

## சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு 3 லட்சத்து 15 ஆயிரம் ரூபா

கிளிநொச்சி,ஜூலை 24

சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கென ஓமந்தை வவுனியாவைச் சேர்ந்த 20 வயது இளைஞர் ஒருவருக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் மூன்று லட்சத்து 15 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை இந்த நிதி வழங்கும் நிகழ்வு தமிழர் புனர்வாழ்வுக் கழக நடுவப் பணியகத்தில் இடம்பெற்றது.

இதில் கழகத் தலைவர் வே.சிவனடியார் இளைஞனின் தாயரான திருமதி மாரியம்மா கருணாகரனிடம் பணத்தைக் கையளித்தார்

கருணாகரன் ராஜ்குமார்(வயது 20) என்ற இளைஞனின் சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்காகவே இந்நிதி வழங்கப்பட்டுள்ளது.

புலம்பெயர்ந்து லண்டனில் வதிபவர்களால் இந்நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(203)




உமையாள்புரம் கிராமத்தைச் சேர்ந்த ஆறு பயனாளிகளுக்கு உலக உணவு நிறுவனத்தின் அனுசரணையுடன் பசுமைப் புரட்சிக்கான நிறுவனம் மானிய அடிப்படையில் நல்லின பசுமாடுகளை வழங்கியபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பொறுப்பாளர் மு.செந்தில், கிராம உத்தியோகத்தர் சேகர், காராளி சினைப்படுத்தல் உத்தியோகத்தர் மாதவராசா மற்றும் அரசியல்துறையினர் ஆகியோரையும் இத்திட்டம் தொடர்பாக விளக்கமளிக்கப்படுவதையும் மாடுகள் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: பரந்தன் செய்தியாளர்)

## கால்நடை அபிவிருத்தி நிலையத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவு விழா

பரந்தன்,ஜூலை24

கிளிநொச்சியிலுள்ள 'காராளி' செயற்கை முறைச் சினைப்படுத்தல் நிலையத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவு விழாவும் கால்நடை அபிவிருத்தி தொடர்பான 'எங்கள் வளம்' என்னும் நூல் வெளியீடும் கடந்த 14ஆம் திகதி கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றன.

எழுத்தாளர் சிதம்பர திருச்செந்தில்நாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கருத்துரைகளை வடக்கு - கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் வைத்தியர் சி.கே.சிவபாலசிங்கம், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராஜநாயகம், புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் நா.தமிழன்பன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன், காராளி செயற்கை முறைச் சினைப்படுத்தல் நிலைய இயக்குநர் மா.மகாதேவன் ஆகியோர் வழங்கினர்.

இதனையடுத்து நூல் வெளியீடு இடம் பெற்றது.

நூலை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் வெளியிட்டு வைக்க அதன் முதற்பிரதியை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராச நாயகம் பெற்றுக்கொண்டார்.

நூலின் மதிப்பீட்டுரையை விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் கா.வே.பாலகுமாரன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து பணியாளர், தொழில்நுட்பவியலாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். இதனையடுத்து சிறந்த கால்நடை வளர்ப்பாளர்களுக்கும் பண்ணையாளர்களுக்கும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

(203-352)

## கிணறுகளுக்குக் குளோரின் இடுங்கள்; கொதித்தாறிய நீரையே பருகுங்கள்

### தொற்றுநோய்களைத் தடுக்க அறிவுறுத்தல்

வெள்ளாங்குளம்,ஜூலை 24

கிணறுகளுக்கு குளோரின் இடுவதன் மூலமும் கொதித்தாறிய தண்ணீரை குடிதண்ணீராகப் பயன்படுத்துவதன் மூலமும் தொற்று நோய்கள் ஏற்படாமல் தடுக்கமுடியும்.

தமிழீழ சுகாதார சேவைகளின் பூநகரி பிரதேச இணைப்பாளர் பி.அரவிந்தன் இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார்.

பூநகரிப் பிரதேசத்தில் தற்போது குடிதண்ணீருக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. சுகாதாரமற்ற குடிதண்ணீரைப் பயன்படுத்த வேண்டிய இக்கட்டான நிலை நிலவுகின்றது. இதனால் தொற்றுநோய்கள் பரவாது தடுக்கவே இணைப்பாளர் மேற்கண்டவாறு அறிவுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது-

சிறுவர்கள் ஐஸ்கிறீம், ஐஸ்பழம் போன்றவற்றை அருந்த அனுமதிக்கவேண்டாம் என்றும் -

குடிதண்ணீர் தொடர்பாக சந்தேகம் ஏதும் ஏற்படின் அது தொடர்பாக சுகாதார சேவையின் இணைப்புச் செயலகங்களுடன் தொடர்பு கொண்டு தெரிவிக்கவேண்டுமென்றும் - அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(203-415)

## மூன்றாம்பிட்டியில் மருத்துவ முகாம்

மன்னார், ஜூலை24

மன்னார் மாவட்டத்தின் மூன்றாம்பிட்டி அ.த.க. பாடசாலையில் கடந்த வியாழக்கிழமை தமிழீழ சுகாதார சேவையினரால் லெப்.கேணல் கௌசல்யன் நடமாடும் மருத்துவசேவையொன்று நடத்தப்பட்டது.

இதில் பொது மருத்துவசிகிச்சை, பற்சிகிச்சை, கண்பரிசோதனை, நவீன உபகரணங்களுடன் கூடிய ஆய்வுகூடப் பரிசோதனை என்பன இடம்பெற்றன.

அத்துடன் பற்சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வுக்கருத்தூட்டலும் வீடியோப் படக்காட்சியும் இடம்பெற்றன. இதில் நானூறிற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து சிகிச்சை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## மன்னன் பண்டாரவன்னியனின் வெற்றிவிழா அடுத்த மாதம் கற்சிலைமடுவில் நடத்தப்படும்

அக்கராயன்,ஜூலை24

ஒட்டுசுட்டான் கற்சிலைமடுவில் வன்னியின் இறுதி மன்னன் பண்டாரவன்னியனின் வெற்றி விழா நிகழ்வு அடுத்த மாதம் 25ஆம் திகதி நடத்தப்படவுள்ளது.

பண்டாரவன்னியன் முல்லைத்தீவில் ஆங்கிலேயர் கோட்டையைத் தாக்கியழித்த நாளை பண்டாரவன்னியனின் வெற்றி நாளாக ஆண்டுதோறும் கற்சிலைமடுவில் கொண்டாடிவருகின்றனர்.

இவ்விழா ஏற்பாடு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11மணிக்கு அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

பண்டாரவன்னியனின் வெற்றி நாளான அடுத்த மாதம் 25ஆம் திகதி புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் பண்டாரவன்னியன் நினைவான மலர் வெளியீடும் ஆய்வரங்க மும் இடம்பெறவுள்ளன என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கலை, பாரம்பரிய நிகழ்வுகளை உள்ளடக்கி பண்டாரவன்னியனது நிகழ்வு கொண்டாடப்படவுள்ளது.

(203-420)




## சிறுபோகம் செய்யப்பட்ட நெற்பயிர்களில் கறுப்பு மூட்டுப் பூச்சி வண்டுத்தாக்கம்

### விளைச்சல் பாதிப்பென விவசாயிகள் கவலை

பரந்தன், ஜூலை24

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்ட 2006 சிறுபோக நெற்பயிர்களில் கறுப்பு மூட்டுப்பூச்சி வண்டின் தாக்கம் அதிகரித்துள்ளதாக விவசாயிகளால் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மூட்டுப்பூச்சிகள் நெற்பயிர்களின் அடிப்பாகத்தில் அதிக தாக்கத்தை ஏற்படுத்துவதால் நெற்பயிர்கள் கதிர்வராது இறந்துவிடுகின்றன.

இவ்விடயம் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்களத்தினர் கருத்துத் தெரிவிக்கையில்:

கறுப்பு மூட்டுப்பூச்சி வண்டின் தாக்கத்தால் நெல் விளைச்சலில் பாரிய சேத நஷ்டம் ஏற்படும்.

நெற்பயிர்களின் அடிப்பாகத்தில் வண்டின் நடமாட்டம் இருப்பதை விவசாயிகள் அவதானித்தால் உடனடியாக உரிய இரசாயன மருந்தை சிபார்சுக்கு அமைவாக காலந்தாழ்த்தாது பயிர்களுக்கு விசிறி பூச்சியின் தாக்கத்திலிருந்து நெற்பயிரைப் பாதுகாக்க வேண்டும்.

அத்துடன் விவசாயிகள் அந்தந்தப் பகுதி விவசாயப் போதனாசிரியர்களை அணுகி ஆலோசனைகளையும் பெற்று தாமதமின்றி அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் நெல் உற்பத்தியின் வீழ்ச்சியைத் தடுக்கமுடியும்- என்றார்.

(203-352)



ஸ்கந்தபுரம்- கோணாவில் இணைப்பு வீதி புனரமைப்பிற்காக கிரவல் பறிக்கப்பட்டு நீண்ட நாள்களாகியும் அது பரவப்படாது உள்ளமையால் பயணிகள் போக்குவரத்து செய்யமுடியாது பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிரவல் பறிக்கப்பட்டுப் பரவாது இருப்பதை படங்களில் காணலாம்.

(படங்கள்: ஸ்கந்தபுரம் செய்தியாளர்)

வெற்றிகள் குவிந்த எட்டாண்டுகளின் நிறைவில்
எல்லைகள் கடந்து எழுச்சியின் சிகரத்தில்
எட்டாமாண்டில் ஏற்றமுறும் மகிழ்வுடன்
உங்கள் முதல்வன் சூரியன்!

வானலைகளில் பல்வேறு புதிய
புரட்சிகளை நிகழ்த்தி
சாதனை படைத்த
சூரியன்
மேலும் மேலும் புதிய வெற்றிகளைத் தேடி
உங்கள் ஆசிகளுடன்!

8

எல்லோராலும் அங்கீகரிக்கப்படும்

முதற்தர வானொலி

சூரியன் FM

SOORIYAN FM

அசைக்கமுடியாத அலைவரிசை

103.2 FM 97.3 FM 97.9 FM 93.0 FM

ABC

# கறுப்பு ஜூலையை நினைவுகூர்ந்து கறுப்புக்கொடிகளைப் பறக்க விடுங்கள்

## கோப்பாய் பொதுஅமைப்புகள் கோருகின்றன

யாழ்ப்பாணம்,ஜூலை24

கறுப்பு ஜூலையை ஒட்டி அனைத்து இடங்களிலும் கறுப்புக்கொடிகளைப் பறக்க விட்டு நினைவு கூருங்கள்.

கறுப்பு ஜூலையை ஒட்டி கோப்பாய் பிரதேச பொதுஅமைப்புகளின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கேட்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஈழத்தமிழர்களின் வரலாற்றில் கறைபடிந்த நாளாக நிலைத்துநிற்கும் அந்த கரிநாளை என்றும் மறக்க முடியாது. இன்றும் அந்த அவலங்கள் தொடர்ந்த வண்ணமுள்ளன. அன்று 1983 ஆம் ஆண்டு ஜூலை 24ஆம் திகதி சிங்கள இனவெறி கொண்ட பேரினவாத பேய்களின் கோரப் பற்களில் அகப்பட்ட எம் உறவுகள், பச்சிளம் பாலகர்கள் இரத்த வெள்ளத்திலும், எரியும் தார் பீப்பாக்களிலும் உயிருடன் போட்டு எரிக்கப் பட்டும் மிகக் கொடூரமான, அவலமான மர ணத்தைத் தழுவினார்கள். ஏதுமறியா அப்பாவித் தமிழர்கள் உடல்களில் சிங்கள சிறி குத்தப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டது. இதை யெல்லாம் சிங்களக் காடையர்கள் செய்வதை பாராமுகமாக வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது சிங்கள அரசு.

அன்று தென்னிலங்கையில் ஏற்பட்ட இந்த நிலைக்கு தமிழர்களின் பலவீனமே காரணம் எனக் கருதித் தொடர்ந்தும் கரிநாள்களாகக் காலத்தைக் கடத்தலாம் எனத் தப்புக்கணக்குப் போட்டது சிங்களப் பேரினவாதம்.

தமிழ் மக்களாகிய நாம் எமது போராட்டத்தின் வளர்ச்சி காரணமாக சர்வதேசத்தையும், சிங்கள தேசத்தையும் உற்றுப்பார்க்க வைத்தோம். இன்று சிங்கள தேசம் தமிழர்கள் மீது வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டு மறைமுகமாகப் பிரகடனப்படுத்தப்படாத மட்டுப்படுத்தப்பட்ட யுத்தம் ஒன்றை மக்கள் மீது திணித்துள்ளது. இதன்வெளிப்பாடாக அப்பாவிப் பொதுமக்களின் உயிர்கள் அநியாயமாகப் பறிக்கப்பட்டு வருகின்றது.

தமிழர்களாகிய நாம் ஒன்றை சிங்கள தேசத்திற்கு சொல்லிவைக்க விரும்புகின்றோம். மீண்டும் ஒரு கறுப்பு ஜூலை போன்ற வன்முறைகளை தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விட சிங்களதேசம் எண்ணுமானால் அதன் எண்ணம் ஈடேறுவதென்பது தமிழர்களின் பலத்தின் முன் மண்டியிடுவதாகும் என்பதையும் சிறிலங்கா தேசத்தின் இனவாதத் தலைவர்களின் இரட்டைவேட அரசியலை அம்பலப்படுத்தி எம்மை நாமே பாதுகாத்துக் கொள்ளுமளவிற்கு எமக்குப்பலம் உண்டு. இதன் விளைவுகள் பேரினவாத பேய்களின் குகைகளுக்குள் சுட்டெரிக்கும் எரிமலை களாகக் குமுறி சிங்களதேசத்தை திக்கித்திணற வைக்கும்.

எனவே, பாசமிகு உறவுகளே இந் நாளில் வதைக்கப்பட்டு, உதைக்கப்பட்டு சிறைகளில் வாடி சிதைக்கப்பட்ட எம் இனிய உறவுகளுக்கு மக்களின் ஒன்றுபட்ட எழுச்சியை காணிக்கையாக்கி, சிங்கள அரசின் நிலைகுலைந்த போக்கை சர்வதேசத்திற்கு வேடிக்கையாக்கி நினைவு கூருவதோடு இன்றுவரை சிங்கள ஆதிக்க வெறியர்களின் கோரப்பிடிகளுக்குள் அகப்பட்டு சிறைகளில் வாடித்துடிக்கும் எம் உறவுகளுக்கு விடுதலை எப்போது? சாட்டுப்போக்குச் சொல்வது சிங்களத் தலைவர்களின் பதில் என்றால் இவர்களை மீட்பதும் எமது பலத்தின் வெளிப்பாடாகவே இருக்கும். எமது உள்ளங்களிலும், இல்லங்களிலும், அலுவலகங்களிலும், வர்த்தக நிலைய முகப்புக்களிலும், சந்திகள் அனைத்திலும் கறுப்புக்கொடிகளைப் பறக்கவிட்டு நினைவு கொள்வோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஏழாலையில் விபத்து: இருவர் படுகாயம்!

ஏழாலை,ஜூலை, 24

ஏழாலை உத்தமன் சிலையடிப்பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்குநேர் மோதியதாகக் கூறப்படும் சம்பவத்தில் இருவர் படுகாயம் அடைந்தனர்.

குறிப்பிட்ட மோட்டார் சைக்கிள்களைச் செலுத்தி வந்தவர்கள் எனக் கூறப்படும் ஏழாலையைச் சேர்ந்த தவம் (வயது 38), ஏழாலை வடக்கைச் சேர்ந்த வெள்ளை ஆகிய இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களுள் தவம் என்பவர் ஆபத்தான நிலையில் இருப்பதாகக் கூறப்பட்டது. (எ-45)

## ஊர்காவற்றுறையில் சிசுவின் சடலம் மீட்பு

ஊர்காவற்றுறை,ஜூலை, 24

ஊர்காவற்றுறை, கரம்பொன் சண்முகநாதன் வித்தியாலயத்திற்கு அருகில் கைவிடப்பட்ட வீட்டுக் கிணற்றுக்குள் இருந்து ஆண் சிசு ஒன்றின் சடலம் கடந்த வியாழக்கிழமையன்று மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி பாடசாலை மாணவர்களாலேயே குறித்த கிணற்றினுள் சிசுவின் சடலம் இருந்தது கண்ட றியப்பட்டது.

இது குறித்து அப்பகுதி கிராமசேவை அலுவலர் கணபதிப்பிள்ளை நேரில் சென்று பார்வையிட்டதுடன், ஊர்காவற்றுறை பொலீஸாரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.


பொலீஸார் இச்சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(1-16)

## கூட்டுறவுச்சங்கத்தின் வெதுப்பக ஊழியர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு

வலி.தென்மேற்கு,ஜூலை24

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க வெதுப்பகத்தில் பணிபுரிந்துவரும் ஊழியர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு ஒன்றை வழங்குவது என்று சங்க நிர் வாகம் தீர்மானித்துள்ளது.

இதேவேளை-பாண் உற்பத்தியை இயந்திர மயப்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது என்று சங்கத்தின் பொது முகாமையாளர் இ.தங்கராசா இதுபற்றித் தகவல் தருகையில் தெரிவித்தார். (எ-135)




## பருத்தித்துறை பிரதேச செயலக போட்டி முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம்,ஜூலை24

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட மாணவர் மற்றும் திறந்த போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

**கட்டுரை**

கனிஷ்ட பிரிவு - செ.ஆர்த்திகா (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), அ.அனுசியா (சென்.தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலை), சா.மதுசூதனா (வட இந்து மகளிர் கல்லூரி).

சிரேஷ்ட பிரிவு - பு.சௌமியா (வட இந்துமகளிர் கல்லூரி), தே.நவீனா (மெதடிஸ்த பெ.க. பாடசாலை), சி.பர்கினி (மெதடிஸ்த பெ.க. பாடசாலை).

**கவிதை**

மட்டுப்படுத்தப்பட்ட பிரிவு - ந.அபிராமி (வட இந்து மகளிர் கல்லூரி), ம.மேரிதர்சிகா (சென்.தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலை), அ.உஷா (வட இந்து மகளிர் கல்லூரி).

திறந்த பிரிவு - கே.ஆர்.திருத்துவராசா (அல்வாய்), மு.தணிகாசலம் (கற்கோவளம்), பா.வேதநாயகம் (தும்பளை தெற்கு).

ஆங்கிலம் - இ.பஞ்சலிங்கம் - பருத்தித் துறை), ப.வரதன் (பருத்தித்துறை).

**சிறுகதை**

மட்டுப்படுத்தப்பட்ட பிரிவு - மே.மேரி கொலின்ஸியா (சென்.தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலை), வி.மேரி பவுசியா (சென்.தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலை), ஞா.அனுயா (சென்.தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலை).

திறந்த பிரிவு - திருமதி த.லோகநாயகி (முதலாம் கட்டை ஒழுங்கை, பருத்தித் துறை), செ.கந்தசாமி (யக்கோவள ஒழுங்கை, தும்பளை), பொ.மகாதேவா (நெல்லண்டை, தும்பளை).

ஆங்கிலம் - இ.பஞ்சலிங்கம் (பூதராயர் கோவில் ஒழுங்கை, பருத்தித்துறை).

வெற்றியாளர்களுக்கான சான்றிதழ் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள கலை இலக்கிய விழாவில் வழங்கப்படுமன பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் அறிவித்துள்ளார். (1-117)

## யாழ்ப்பாணக் கல்லூரியில் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை24

வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரி வருடாந்தப் பரிசளிப்பு விழா எதிர்வரும் வியாழக்கிழமை இடம்பெறும்.

கல்லூரி அதிபர் என்.ஏ. விமலேந்திரன் தலைமையில் யாழ்ப்பாணக் கல்லூரி ஒட்லி மண்டபத்தில் இடம்பெறும் பரிசளிப்பு விழாவில் யாழ். பல்கலைக்கழக கணனித்துறை தலைவரும் உயர்மட்ட கற்கைகள் பீடாதிபதி பேராசிரியர் கே. கந்தசாமி, அவரது பாரியார் திருமதி சியாமளா கந்தசாமி ஆகியோர் பிரதமவிருந்தினர்களாக கலந்துகொள்வர்.

2005 இல் கல்வி, விளையாட்டு, ஆக்கத்திறன், ஆங்கிலமொழி, தமிழ் மொழியில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு பரிசில்களும், கிண்ணங்களும் விருதுகளும் வழங்கப்படவுள்ளன. (1-185)

## காரைநகரில் கலாசார விழா நடத்த விரிவான ஏற்பாடு

காரைநகர், ஜூலை24

காரைநகர் பிரதேச கலாசாரப் பேரவையினர் கலை இலக்கியப் பெருவிழாவை நடத்துவதற்கான விரிவான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

காரைநகர் பிரதேச கலாசாரப் பேரவையின் பொதுக்கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலை இலக்கியப் பெருவிழாவை அடுத்த மாதம் 19 ஆம் திகதி சனிக்கிழமை கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் இரண்டு அமர்வுகளாக நடத்துவது என்றும்- ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலிருந்தும் தலா ஒரு கலைஞர் தெரிவு செய்யப்பட்டு கௌரவிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அன்றைய தினம் காரைநகர் கலாசாரப் பேரவையினர் புதிய நிர்வாக சபை தெரிவும் இடம்பெற்றது. கலாசாரப் பேரவையின் தலைவராக உதவி அரச அதிபர் ஆர்.ரி. ஜெயசீலனும், செயலாளராக நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (கலாசாரம்) நா.சோமஸ்கந்த சர்மாவும், பெருளாளராக எஸ்.ஜெயகரனும் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், 11 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (எ-73)

## பருத்தித்துறை தெற்கில் சேதமடைந்த 75 குடியிருப்புகள் புதிதாக நிர்மாணம்

### லயன்ஸ், உலக வங்கி இணைந்து மேற்கொள்ளும்

யாழ்ப்பாணம்,ஜூலை24

பருத்தித்துறை தெற்கு (ஜே/402) கிராம அலுவலர் பிரிவில் யுத்தத்தினால் முற்றாகச் சேதமடைந்த குடியிருப்புகளில் வறுமைக் கோட்டின்கீழ் உள்ளவர்களுக்கு 75 குடியிருப்புகள் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளன.

சர்வதேச லயன்ஸ் கழகத்தினரும் உலக வங்கியினரும் இணைந்து இந்தக் குடியிருப்புகளை அமைத்துக் கொடுக்கவுள்ளனர்.

இத்திட்டத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட 75 பயனாளிகளின் பெயர்ப்பட்டியல் பிரதேச செயலகத்திலும் கிராம அலுவலகத்திலும் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

பயனாளிகளின் தெரிவு தொடர்பான ஆட்சேபனைகள் இருப்பின் நாளைமறுதினத்துக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் கையளிக்குமாறும் கிடைக்கும் ஆட்சேபனைகள் உடனுக்குடன் விசாரணைக்கு எடுக்கப்படுமெனவும் பிரதேச செயலாளர் இ.வரதீஸ்வரன் தெரிவித்தார். (1-117)

## கலாசார பேரவைக்கு புதிய நிர்வாகம் தெரிவு

யாழ்ப்பாணம்,ஜூலை24

பருத்தித்துறை பிரதேச கலாசாரப் பேரவையின் பொதுக் கூட்டம் அண்மையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவில் பேரவையின் தலைவராக பிரதேச செயலர் இ.வரதீஸ்வரனும், உபதலைவராக வீ.சேதுநாயகமும், செயலாளராக திருமதி சு.விஜயரத்தினமும், உபசெயலாளராக பொ.மகாதேவனும், பொருளாளராக திருமதி சா.தியாகராசாவும் தெரிவுசெய்யப்பட்டனர். மேலும் 12 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (117)







கரவெட்டி திருஇருதயக் கல்லூரியில் நவோதய கண்காட்சி கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.நிகழ்வில் கல்லூரி அதிபர் வ.கணபதிப்பிள்ளை மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும் - பிரதம விருந்தினரான கரவெட்டிப் பிரதேச பங்குத் தந்தை ஏ.எம்.பி. ஆனந்தகுமார் நாடா வெட்டி கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதை இரண்டாவது படத்திலும் - விருந்தினர்களும் மாணவர்களும் கண்காட்சியைப் பார்வையிடுவதை மூன்றாவது படத்திலும் - காணலாம். *(படங்கள்: கரவெட்டிச் செய்தியாளர்)*

## கண்ணீர் அஞ்சலி



எமது வலி.கி.தெ.ப.ப.நோ.கூ.சங்கம்
நீர்வேலி கிளை முகாமையாளர்
**சின்னமணி தர்மராசா**
அவர்கள் 22.07.2006 அன்று அகால மரணமடைந்த செய்திகேட்டு அதிர்ச்சி அடைவதுடன், அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைனை வேண்டுகின்றோம்.

வலி.கிழக்கு தென்பகுதி,
பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்.

(சி/50358)
(26.11.45)


பணிப்பாளர்களும்,
பணியாளர்களும்.

## 45 ஆம் நாள் நினைவு வணக்கம்

(24.07.2006)

மகவாக
14.02.1970

மாவீரனாக
10.06.2006



## லெப்.கேணல் மகேந்தி

(இராசு மகேந்திரன்)

சாகாவரம் பெற்ற மனிதருண்டோ இவ்வுலகில்
சாவை நினைந்து நாமழுதுகொண்டே இருப்பதற்கு
சாவுக்குள் நின்றும் சாதனைகள் புரிந்தவரே
சரித்திரத்தில் உம் பேர் நிலைக்கும் ஐயா!
நாளும் உம் நினைவுடனே நம்பணி தொடர்ந்திடுவோம்.

இல.19, தொண்டமான் நகர், கிளிநொச்சி.
துணைவியும், குழந்தைகளும்.

## சரசாலை நூலகத்தில் இலவச ஆங்கில வகுப்பு

சாவகச்சேரி,ஜூலை24

2006 உள்ளூராட்சி வாரத்தையொட்டி சாவகச்சேரி பிரதேச சபை கொடிகாமம் தலைமைப் பணிமனையின் சரசாலை உப பணி மனையின் பொது நூலகத்தில் மாண வர்கள், பொதுமக்கள் நலனைக் கருத்திற் கொண்டு இலவச ஆங்கில இலக்கண வகுப்பு நடத்தப்படவுள்ளது.

மேற்படி ஆங்கில வகுப்பு நாளை மறு தினம் புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப் படவுள்ளது.

இந்த நிகழ்வு சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் கு.ந.பாலச்சந்திரன் தலை மையில் நடைபெறவுள்ளதாக சரசாலை பொதுநூலக நூலகர் இ.தருமலிங்கம் தெரிவித்தார். (1-31)

## ஆடிஅமாவாசை நிகழ்வுகள் இன்று

வலி.வடக்கு,ஜூலை24

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் ஆடி அமாவாசை தினமான இன்று திங்கட்கிழமை விசேட பூசைகள், அபிசேகங்கள் இடம் பெறவுள்ளன. (203-86)

* * *

ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் ஆடி அமாவாசைத் தீர்த் தம் இன்று திங்கட் கிழமை கெருட மடு திருக்குளத்தில் நடைபெறவுள்ளது.

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ் வரர் ஆலயத்தி லிருந்து முருகப் பெருமான் கெருட மடு திருக்குளத் திற்கு எழுந்தருளி அமாவாசை கூடு கின்ற நேரத்தில் தீர்த்தமாடி அடிய வர்களுக்கு அருள் பாலிப்பார். (13-314)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
22 - 12 - 1920



அம்பாளின் திருவடியில்
20 - 07 - 2001

### அமரர் செல்லப்பா பாலசுப்பிரமணியம்

(திதி: 24-07-2006)

வார்த்தையால் வடிக்கமுடியாத பாசத்திருவுருவே!
வாடி நிற்கின்றோம் உம்பிரிவு துயரினிலே!
ஐந்தாண்டுகள் சென்றாலும் அகலாது உம் நேசம்!
கண்போல எம்மை என்றும் காத்து நிற்கும்

பிரதான வீதி,
வட்டு. தென்மேற்கு,
வட்டுக்கோட்டை.

என்றும் உங்கள் நினைவுடன்...
அன்புமிக்க மனைவி,
மக்கள், மருமக்கள்.

(52542)(26.11.45)


## Alliance Computer Institute

**O/L, A/L** பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான கணனிக் கற்கை நெறி


| Certificate Courses | Diploma Courses |
|---|---|
| One Month 1250/= | 5Months 2250/= |
| Certificate in MS Word | Dip. in Microsoft Office |
| Certificate in MS Excel | Dip. in Desktop Publishing |
| Certificate in MS Access | |
| Certificate in PhotoShop | |
| Certificate in Page Maker | Closing Date 28-07-2006 |
| Certificate in Corel Draw | Course start at 01-08-2006 |

கீழ் காணும் முகவரியில் விண்ணப்பப் படிவங்களை 28-07-2006 முன் பெற்றுக்கொள்ளவும்

Alliance Computer Driving Licence
25, Somasundram Avenue,
Jaffna, Srilanka.
Alliance Development Trust
44/1,Old Park Road, Chundikuli,
Jaffna. Tel.021-2228193

(52539)





லெபனான் பிரதேசத்தில் இஸ்ரேலின் குண்டுத் தாக்குதல்களினால் பாரிய சேதமடைந்துள்ள கட்டடங்களைப் படங்களில் காணலாம்.

# அமெரிக்காவின் ஆயுதக்கப்பல் இஸ்ரேலுக்கு உதவ விரைகின்றது

## மத்திய கிழக்கு நிலைமை மோசமடைகிறது

நியூயோர்க்,ஜூலை.24

லெபனான் மீது இஸ்ரேல் மேற்கொண்டு வரும் தாக்குதல்களுக்கு உதவும் வகையில் இஸ்ரேலின் ஆதரவு நாடான அமெரிக்கா நவீன வெடிகுண்டுகளைக் கப்பலில் இஸ்ரேலுக்கு அனுப்பிவைத்துள்ளது.

அமெரிக்காவின் 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகை இத்தகவலை வெளியிட்டுள்ளது.

லெபனான் மீது இஸ்ரேல் கடந்த 11 நாள்களாகத் தாக்குதல்களை நடத்தி வருகின்றது. அந்த நாட்டின் ஹிஸ்புல்லா தீவரவாதிகளைக் குறிவைத்து லெபனானின் தலைநகர் பெய்ரூட் உள்ளிட்ட பல நகரங்கள் மீது இஸ்ரேல் விமானங்கள் சரமாரியாகக் குண்டுத்தாக்குதல்களை மேற்கொள்கின்றன.

லெபனான் நாட்டில் வேலை பார்த்து வந்த ஆயிரக்கணக்கான வெளிநாட்டவர்கள் அங்கிருந்து தங்களது உயிரைக் காப்பாற்றிக்கொள்ள தாய் நாட்டுக்குத் திரும்பிச் செல்கின்றார்கள்.

தாக்குதலைத் தொடங்கியபோதே தங்களுக்கு வெடிகுண்டுகள் மற்றும் ஆயுதங்களை அனுப்பிவைக்கும்படி இஸ்ரேல் தனது தீவிர ஆதரவு நாடான அமெரிக்காவை கேட்டிருந்தது. ஆனால், போர் தொடங்கி 11நாள்கள் ஆகியும் அமெரிக்க ஆயுதங்கள் வந்து சேராததால் விரைவாக அனுப்பி வைக்கும்படி இஸ்ரேல் மீண்டும் கேட்டுக்கொண்டது.

அதன் வேண்டுகோளுக்கிணங்க நேற்று முன்தினம் நவீன வெடிகுண்டுகள் மற்றும் ஆயுதங்கள் நிரப்பிய ஒரு கப்பல் இஸ்ரேலுக்கு அமெரிக்காவில் இருந்து புறப்பட்டுள்ளது.

அமெரிக்க அதிபர் புஷ் மற்றும் உயர் அதிகாரிகளிடையே ஆயுதங்கள் அனுப்புவது தொடர்பாக சிறிது விவாதம் நடந்தபிறகே ஆயுதக் கப்பலை அனுப்ப முடிவு எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''லெபனானுக்கு ஈரான் ஆயுத விநியோகம் செய்து வருகிறது. இது சில நாடுகளுக்கு வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது. அதேபோல அமெரிக்கா இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் மற்றும் வெடிகுண்டுகளை அனுப்பியிருப்பது அரபு நாடுகளுக்கு ஒரு வகை மிரட்டல் என்றும், இந்த சம்பவம் அந்த அரபு நாடுகளுக்கு கோபத்தை ஏற்படுத்தியுள்ளது'' என்றும் நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்கா ஆயுதங்களை இப்போது அனுப்பியிருப்பது இஸ்ரேல் நடத்தும் தாக்குதலை ஆதரித்தல்ல என்றும், கடந்த ஆண்டே இஸ்ரேல் பலகோடி டொலர் மதிப்புள்ள ஆயுதங்கள் வாங்கிக்கொள்வதாக ஒப்பந்தம் செய்து, அந்த வியாபாரத்தின் அடிப்படையிலேயே ஆயுதக் கப்பல் அனுப்பப்பட்டு இருப்பதாகவும் அந்த பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஆனால், இப்படி திடீரென ஆயுதங்கள் அனுப்பப்படுவது வழக்கத்துக்கு மாறானது என்றும் இஸ்ரேல் லெபனான் நாட்டில் பல இடங்களில் தாக்குதல் நடத்துவதற்காகவே கேட்டு, அதன்படி அனுப்பப்படுகிறது என்றும் சில இராணுவ அதிகாரிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இதேவேளை-

இஸ்ரேலின் தாக்குதல்களால் லெபனானில் 350 இற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். தொடர்ந்தும் குண்டுத்தாக்குதல்கள் இடம்பெறுவதால் பெய்ரூட் பூகம்பம் ஏற்பட்ட பிரதேசம் போல் சிதைந்து போய் காணப்படுகின்றது. (202)

## இந்தோனேஷியாவுக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவு

ஜகார்தா, ஜூலை24

அடுத்தடுத்துப் பூமியதிர்ச்சி மற்றும் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இந்தோனேஷியாவுக்கு இப்போது சுற்றுலாப் பயணிகள் வருகை குறைந்துவிட்டது.

இன்னும் ஒரு வருடத்துக்கு சுற்றுலா பயணிகள்எவரும் இந்தோனேஷியாவுக்கு வரமாட்டார்கள் என்று எதிர்பார்ப்பதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தோனேஷியாவின் கடற்கரை நகரங்களில் இப்போது நிவாரண வேலைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. கடற்கரை அருகே உள்ள ஹோட்டல்களை புதுப்பிக்கும் வேலைகளும் நடைபெற்றுவருகின்றன. ஆயினும் பயம் காரணமாக சுற்றுலாப் பயணிகள் வருகை இன்னும் ஒரு வருடத்துக்கு இருக்காது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (202)

# தமிழீழத் தனியரசை உருவாக்குவதற்கு உலகத் தமிழர் அணி திரளவேண்டும்

## அழைப்பு விடுக்கின்றார் வைகோ

சென்னை,ஜூலை24

தமிழீழத் தனியரசை தமிழீழ விடுதலைப் புலிகள் வென்றெடுப்பதற்கு உலகத் தமிழர்கள் அனைவரும் துணைபுரிய வேண்டுமென மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

உலகத் தமிழர்கள் வாழும் தலைநகரங்களில் முன்னெடுக்கப்படும் கறுப்புஜூலை எழுச்சிப் பேரணிகளை முன்னிட்டு ஐ.பி.சிக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய சூழல் மாறி தமிழீழத் தனியரசை தமிழீழ விடுதலைப் புலிகள் அரசோச்சும் காலம் வெகு விரைவில் தோன்றும்.

தமிழ் மக்களின் துயரங்கள் குறித்து அனைத்துலக சமூகம் கவனிக்கத் தவறியுள்ள போதும் உலகத் தமிழர்கள் அனைவரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையில் அணிதிரண்டு தமிழீழ தேசத்தின் விடுதலைக்காக குரல்கொடுக்க வேண்டும் - என்றார் அவர். (202)

# இஸ்ரேல் தாக்குதலுக்கெதிராக லண்டனில் பெரும் ஆர்ப்பாட்டம்

லண்டன்,ஜூலை24

லெபனானிலும் பலஸ்தீனத்தில் காஸாவிலும் இஸ்ரேலியர் நடத்திவரும் பெரும் தாக்குதல்களை எதிர்த்து லண்டனிலும் வேறு தலை நகரங்களிலும் பெரும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

லண்டனில் நடந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் லெபனான் கொடிக்கு முக்கியத்துவம் கொடுத்து முன்னால் கொண்டு செல்லப்பட்டது.

அமெரிக்க தூதரகத்தை ஆர்ப்பாட்ட ஊர்வலம் அண்மித்தபோது பெருந்திரளாக மாறியது. சீருடை தரித்த 50 பொலிஸார் உலோக தடை, தடிகளுடன் நின்று ஊர்வலம் பிரதான வாயிலை அடையாமல் தடுத்தார்கள்.

ஜோர்ஜ்.புஷ் பயங்கரவாதி, அமெரிக்கா ஒழிக என்றவாறு கோஷங்களை ஆர்ப்பாட்டக் காரர்கள் உரத்துக் கத்தினார்கள்.

லெபனான் நாட்டு கொடிகள் மற்றும் ஹிஸ்புல்லா கொடிகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் வைத்திருந்தார்கள் .

பலஸ்தீன ஒருங்கிணைப்பு இயக்கம், பிரிட்டிஸ் முஸ்லிம் அமைப்பு மற்றும் லெபனானிய அமைப்புகள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டன.

காஸா மீதும் லெபனான் மீதும் இஸ்ரேல் மேற்கொண்டுள்ள போரானது சர்வதேச நெருக்கடியாக விரிவடைந்து கொண்டிருக்கின்றது. விரைவில் முழுப்பிரதேசத்தையுமே இது விழுங்கப் போகிறது என்று ஆர்ப்பாட்டக் காரர்கள் கூறினர். லெபனானில் தாங்கள் நடத்தும் தாக்குதல்கள் ஹிஸ்புல்லா கெரில்லாக்களால் கடத்தப்பட்ட தமது இரு படை வீரர்களை மீட்பதற்கும் இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா நடத்தும் ரொக்கட் தாக்குதல்களை நிறுத்துவதற்குமே என்று இஸ்ரேலியர் கூறியுள்ளனர்.

இஸ்ரேல் தாக்குதல்களிலிருந்து தப்புவதற்காக தென்லெபனானிலிருந்து வெளியேறுவதற்கு ஆயிரக்கணக்கான வெளிநாட்டவர்கள் முண்டியடித்துக்கொண்டிருக்கிறார்கள். (ப)

# விண்வெளியில் நடக்க 150 கோடிரூபா

விண்வெளிக்குச் சுற்றுலா சென்று விண்வெளியில் இறங்கி நடப்பதற்காக 150 கோடி இந்திய ரூபா அறவிடப்படவுள்ளது.

அமெரிக்கா,ரஷ்யா உட்பட 16 நாடுகள் இணைந்து விண்வெளியில் மிதக்கும் சர்வதேச ஆய்வுகூடத்தை அமைத்திருக்கின்றன. இந்த ஆய்வுகூடத்தை நிபுணர்கள் அவ்வப்போது சென்று ஆய்வு நடத்திவருகிறார்கள்.

இவர்களுடன் சில நேரங்களில் சுற்றுலா பயணிகளையும் ஒரு நிறுவனம் அனுப்பி வைக்கிறது.

அடுத்த கட்டமாக விண்வெளிக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகள் விண்ணில் இறங்கி நடப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

விண்வெளிக்கு ரொக்கெட்டில் செல்லவும் விண்வெளியில் இறங்கி நடக்கவும் ஒரு பயணிக்கு 150 கோடி இந்திய ரூபா செலவாகும். ஒரு மணிநேரம் அவர் விண்வெளியில் இறங்கி நடக்கலாம்.

விண்வெளியில் இறங்கி நடக்க அந்தச் சுற்றுலா பயணிக்கு 6 மாதம் ரஷ்ய விண்வெளி நிபுணர்கள் பயிற்சி கொடுக்கின்றனர்.

விண்வெளி ஆய்வுகூடம் அமைக்கவும் ரொக்கெட்டுகளை அடிக்கடி அனுப்பவும் அதிக செலவாகின்றது. இதனால் செலவைச் சமாளிக்கவே இந்தச் சுற்றுலாத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.(202)

# தமிழ் எழுத்துக்கள் பொறித்த புராதன பானை ஓடு தாய்லாந்தில்

தாய்லாந்து,ஜூலை24

தாய்லாந்தில் நடைபெற்றுவரும் அகழ்வாராய்ச்சியின்போது 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ் பிராமி எழுத்துக்கள் பொறித்த பானை ஓடு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்தின் பு காவ் தோங் என்னும் இடத்தில் தாய்லாந்து மற்றும் பிரான்ஸ் நாட்டு தொல்லியல் அறிஞர்கள் கூட்டாக அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். அங்கு அண்மையில் எழுத்துப் பொறித்த பானை ஓடு ஒன்று கிடைத்துள்ளது.

அந்த ஓட்டில் எஞ்சியுள்ள 3 எழுத்துக்களில் நடுவிலுள்ளது 'ற' என்பதால் அது தமிழ் - பிராமி எழுத்துக்களால் எழுதப்பட்டது என்றும் -

எழுத்துக்களின் அமைப்பைக் கொண்டு இவை கி.பி. 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. என்றும் - தொல்லியல் அறிஞர்கள் தெரிவித்துள்ளனர். (202)

உலக அரங்கில்

# பாகிஸ்தானிலுள்ள தீவிரவாதிகளை விசாரிக்க இந்திய பொலிஸுக்கு அனுமதி இல்லை

## பாக். வெளியுறவு அமைச்சர் கூறுகின்றார்

இந்தியா - பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் பரஸ்பர நம்பிக்கை உறவை வளர்க்கும் வரை பாகிஸ்தானினுள்ள தீவிரவாதத் தலைவர்களை விசாரணை செய்ய அனுமதிக்கமாட்டோம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் கசூரி.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

அணு ஆயுத ரகசிய கடத்தல் பிரச்சினையில் தொடர்புடைய பாகிஸ்தான் விஞ்ஞானி ஏ.யூ.கானிடம் விசாரணை நடத்த அமெரிக்காவுக்கே நாங்கள் அனுமதி அளிக்கவில்லை.

எதிர்வரும் 31ஆம் திகதி டாக்காவில் சார்க் வெளியுறவுச் செயலாளர்கள் கூட்டமும் அதைத் தொடர்ந்து வெளியுறவு அமைச்சர்கள் கூட்டமும் நடைபெறவுள்ளன. இந்தக் கூட்டங்கள் இருதரப்பு எதிர்கால பேச்சுவார்த்தைக்கான வாய்ப்புகளை வழங்கும் - என்றார். (202)

# முருகனின் ஆக்கத்திற்கு 'இந்திராகாந்தி' விருது



சென்னை,ஜூலை24

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று வேலூர் சிறையிலுள்ள முருகன் வரைந்த படத்திற்கு 'இந்திராகாந்தி' தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது.

சிறையிலுள்ள கைதிகளின் திறமைகளை வெளிக்கொணர்ந்து ஆண்டுதோறும் விருதுகளும் பரிசில்களும் வழங்கிவரும் மகாத்மாகாந்தி மறுவாழ்வு அமைப்பே இந்த விருதை வழங்கியுள்ளது. முருகன் வரைந்த பெரியார் படமும் அடுத்து குடும்பப் படமுமே இந்த ஆண்டுக்கான 'இந்திராகாந்தி' தேசிய விருதுக்குத் தெரிவுசெய்யப்பட்டு முதலாம் இரண்டாம் பரிசில்களைப் பெற்றுள்ளது. (202)

## தேவை

யாழ்.நகரில் இயங்கும் மருத்துவர்களால் நடத்தப்படும் மெடி கிளினிக்குக்கு பெண் தாதிய உதவியாளர்கள் தேவை. முன் அனுபவம் விரும்பத்தக்கது. நேர்முகத் தேர்வு எதிர்வரும் 26ஆம் திகதி புதன் கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும்.

இடம் : சன் றைஸ் மெடி கிளினிக்,
388, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(52560) (26.11.14)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி...

பிறப்பு 03 01 1924



இறப்பு 24 07 2005

### அமரர் பண்டிதர் சரவணமுத்து சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர், ஆவரங்கால் சிவன் தேவஸ்தான தர்மகர்த்தா)

இவ்வுலகில் எம்மைச்
சீரோடும் சிறப்போடும் வாழ
வழிகாட்டிய - எங்கள்
அன்புத் தெய்வமே - அப்பா!
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து
இந்த மண்ணை விட்டு மறைந்து
ஓராண்டென்ன ஒரு நூற்றாண்டே
சென்றாலும்...
உங்கள் நினைவுகள்- எங்கள்
மனங்களில் என்றும் நிறைந்திருக்கும்.

குடும்பத்தலைவரின்
பிரிவால் துயருற்றிருக்கும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

114,சப்பல்லேன்,
வெள்ளவத்தை,
கொழும்பு-06

(52...)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா குமாரசாமி



சாவகச்சேரி, கெருடாவிலைப் பிறப்பிடமாகவும் இல.07, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட க.குமாரசாமி 21-07-2006 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் திருமதி கு.இராசம்மா அவர்களின் அன்புக் கணவரும் திருமதி க.இராஜ லட்சுமி (கல்வயல்), திருமதி க.யோகேஸ்வரி (சுவிஸ் - முன்னாள் தொழில் நுட்பவியலாளர்), திருமதி த.தவமலர் (பிரதேச செயலகம், சாவகச்சேரி), செல்வி கு.தவலோஷனா (லண்டன்), ச.யோகேந்திரன்(சாவகச்சேரி), கு.யோகநாதன் (லண்டன்), கு.யோகானந்தன் (சுவிஸ்), அமரர் குமாரதாஸ், திருமதி ஞா.பவானி (லண்டன்) ஆகியோரின் தந்தையும் கணேசமூர்த்தி, காந்தி, தவேந்திரராசா, உதயமலர், மைதிலி, பவளராணி, ஞானராஜா ஆகியோரின் மாமனும் ஆவார். செல்வநாதன், செல்வநந்தினி, செல்வபாலன், செல்வசுயந்தினி, பிரதீப், இந்துஜன், வேணுஜா, மதுஷன், நதீஷா, பிரியதீஷ், நிதர்சன், லக்ஸ்மிகா, அபிஷா, மதுஷனா ஆகியோரின் பேரனும் விதுர்ஷனாவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25-07-2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொழும்புத்துறை, துண்டி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.07, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
சுண்டுக்குளி.

-குடும்பத்தினர்.

(52562)(26.11.14)

## லாசறஸ் யோசவ் அரியநாயகம்

மாதகலைப் பிறப்பிடமாகவும் **Bethany Mount Carmel** வீதியை வசிப்பிடமாகவும் தற்போது **Alberta Canada** வை வசிப்பிடமாகவும் கொண்ட லாசறஸ் யோசவ் அரியநாயகம் அவர்கள் 20.07.2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்ரனி லாசறஸ் (நில அளவையாளர்), - திருமதி மேரி லாசறஸ் தம்பதியரின் அன்பு மகனும் அக்னஸ் டைமனின் அன்புக் கணவரும் லக்ஷமன், சஞ்சீவ், அலிஸ்டனின் அன்புத் தந்தையும் குணநாயகம் (யாழ். சென். சாள்ஸ் முன்னாள் அதிபர்), பேரின்பநாயகம் **(Tobacco Company Executive)**, பாக்கியநாயகம் (கனடா), காலஞ்சென்ற செல்வநாயகம் (பொறியியலாளர், யாழ். சிமெந்துக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின்அருமைச் சகோதரரும் பபியோலா, இந்திரிதேவி, ஜொய்சி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 27.07.2006 வியாழக்கிழமை கனடாவில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

18, சில்வா லேன்,
பம்பலப்பிட்டி,
கொழும்பு - 04,
0112501729

தகவல்:
லாசறஸ் குணநாயகம்
(சகோதரர்).

(52559)(18.26.11.14)

## வடமராட்சியில் பொதுப்பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜூலை24

வடமராட்சி கல்வி வலயத்தின் பருத்தித்துறை, மருதங்கேணி ஆகிய கோட்டப் பாடசாலைகளு[illegible] இரண்டாம் தவணைப் பரீட்சை பொதுப் பரீட்சையாக நடத்தப்படவுள்ளது. பரீட்சைக்கான வினாத்தாள்கள் தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் ஒகஸ்ட் 14 ஆம் திகதி ஆரம்பிக்கப் படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (1-117)

## நாய்களுக்குத் தடுப்பூசி

சாவகச்சேரி,ஜூலை24

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட கொடிகாமம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் இன்று திங்கள் தொடக்கம் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக கொடிகாமம் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் எஸ்.சுதாகர் தெரிவித்துள்ளார். (1-31)

## இடைக்குறிச்சிக்கு மின் விநியோகம்

தென்மராட்சி,ஜூலை24

இடைக்குறிச்சி மேற்கு, கரம்பொன் வீதிப் பகுதிக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முதற்கட்டமாக மின் கம்பங்கள் நடும் வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதாகவும் - மின்கம்பிகள் இணைக்கும் வேலைகள் அடுத்து நடைபெறும் எனவும் - தெரிவிக்கப்பட்டது. (204-122)

## சுழிபுரம் வீதிகள் புனரமைப்பு

சுழிபுரம்,ஜூலை24

சுழிபுரம் பறாளை இறாத்தலடி வீதி மற்றும் முருகன் கோயில் வீதி என்பனவற்றை புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த வீதிகள் நீண்ட காலமாகப் புனரமைப்புச் செய்யப்படாது குண்டும் குழியுமாக காணப்பட்டன. (204-28)

## சமுர்த்தி நிவாரணம்

தென்மராட்சி,ஜூலை 24

மே மாதத்துக்குரிய சமுர்த்தி நிவாரணம் தற்சமயம் தென்மராட்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் வழங்கப்பட்டு வருகின்றது.

நாளை புதன்கிழமைக்கு முன் இந்த நிவாரணப் பொருள்களைத் தத்தமது கிளைகளில் பெற்றுக்கொள்ளுமாறு மேற்படி சங்க முகாமையாளர் சி.தேவகுமார் அறிவித்துள்ளார். (122)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை24

வலி.தென்மேற்குப் பிரிவில் உள்ள சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள், பாடசாலை அதிபர்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்களின் நிர்வாகிகள் ஆகியோருக்கு விசர் நாய் கடியினால் ஏற்படும் பாதிப்பு குறித்து விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்தப்படவிருக்கின்றது.

இக்கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்குப் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் சபைச் செயலாளர் மேரி ஜோசப் சாந்தசீலன் தலைமையில் இடம் பெறும். (1-185)

## படகுச்சேவையை குறைக்க முடிவு

நல்லூர்,ஜூலை 24

நெடுந்தீவு பல நோ.கூ.சங்கத்தின் நெடுந்தீவு-குறிகாட்டுவான் பயணிகள் படகுச்சேவையை நாளொன்றிற்கு ஒரு தடவையாகக் குறைப்பதற்கு சங்கம் தீர்மானித்துள்ளதாகச் சங்க வட்டாரம் தெரிவித்தது.

மேற்படி சங்கம் நெடுந்தீவு- குறிகாட்டுவான் இடையேயான பயணிகள் படகுச் சேவையை நாளொன்றிற்கு இரு தடவைகள் நடத்தி வருகின்றது.

போதிய வருமானமற்ற நிலையில் நாளொன்றிற்கு 60லீற்றர் டீசல் படகுச்சேவைக்காகச் செலவு செய்ய வேண்டியுள்ளதாகவும்-

இதனால் சங்கம் பாரிய நஷ்டத்தை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதனால் படகுச் சேவையைக் குறைக்கும் திட்டத்தைக் கொண்டுவரவுள்ளதாகக் கூறப்பட்டது. (1.111)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப்பயில மற்றும் O/L,A/L,B.A வினாவிடை வகுப்பு. புதிய பிரிவு திங்கள், புதன். 4p.m. பிளாக் வீதி, சங்கானை. By:விக்னேஸ்வரன் ஆச்சாரி.

## நான்காம் ஆண்டு நீங்கா நினைவில்

### இராசையா கிருஸ்ணபவான்

(கண்ணன்)



அன்னை மடியில் 20.07.1982 — ஆண்டவன் அடியில் 08.08.2002

நெஞ்சகத்தில் நீங்காத நினைவு பெற்று
எம்முடனே என்றும் வாழும் எங்கள் கண்ணன்
மண்ணகத்தில் நாமிருக்கும் காலம் வரை
உம் நினைவை என்றும் நாம் மறப்பதில்லை.

இராசையா,
தம்பி ஓடை, வதிரி,
கரவெட்டி.

நின். பிரிவைத் தாங்கித், தவிக்கும்
அம்மா, ஐயா, சகோதரர்கள்,
சகோதரிகள், மைத்துனர்கள், மைத்துனி,
மக்கள், மருமக்கள், நண்பர்கள்.

(52564)(18.11.14.26)

நீங்களும் ஒரு வெற்றியாளரா என்பதை பாருங்கள் !

**அபிவிருத்தி அதிர்ஷ்டம்**

| | |
|---|---|
| சீட்டிழுப்பு இல. | 798 |
| திகதி | 21.07.2006 |
| டிக்கட்டின் வர்ணம் | சிவப்பு |
| செல்லுபடியாகும் தொடர் இல. | 5290435-5305540 |

உத்தியோகபூர்வ முடிவுகள் — வெற்றி இலக்கங்கள்

**23 40 45 50**

லக்னம்  தனுசு

ஜக்பொட் பரிசு **Rs.2,477,750/-** வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 332746 | ரூ. 10/- | ரூ. 3,327,460/- |
| 2 இலக்கங்கள் | 30584 | ரூ. 20/- | ரூ. 611,680/- |
| 1 இல.+லக்னம் | 30118 | ரூ. 30/- | ரூ. 903,540/- |
| 2 இல.+லக்னம் | 2782 | ரூ. 100/- | ரூ. 278,200/- |
| 3 இலக்கங்கள் | 807 | ரூ. 500/- | ரூ. 403,500/- |
| 3 இல.+லக்னம் | 79 | ரூ. 5,000/- | ரூ. 395,000/- |
| 4 இலக்கங்கள் | 03 | ரூ. 100,000/- | ரூ. 300,000/- |
| 4 இல.+லக்னம் | 01 | ரூ. 1,000,000/- | ரூ. 2,477,750/- |
| மொத்தம் | | | ரூ. 8,697,130/- |
| [illegible] | 5 | ரூ. 204,700/- | ரூ. 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 397125 | | ரூ. 9,720,630/- |

இந்த செவ்வாய்க்கிழமை ஜக்பொட் பரிசு

**ரூ. 1,000,000/-**

| | |
|---|---|
| குருணாகல் | 5303851-5-37 |
| அம்பாந்தோட்டை | 5292778-0-60 |
| இரத்தினபுரி | 5299890-5-60 |
| கொழும்பு | 5303494-8-66 |
| மொணராகலை | 5295779-2-80 |

அபிவிருத்தி லொத்தர் சபை

**IDM**

Computer Studies Islandwide (PVT) Ltd.
**Affiliated University College**
*216, Navalar Road, Jaffna.* T.P: 021 4591398

இலங்கையில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்துறையில் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்

**A/L பரீட்சை பூர்த்தி செய்த மாணவர்களே! ஏன் தாமதம்? கணனித்துறையில் சர்வதேச சான்றிதழ்களைப்பெற இன்றே IDM இல் இணையுங்கள்**

NCC - UK
HND - UK
பயிற்சிநெறிக்கான வழிகாட்டல் கருத்தரங்கு செவ்வாய்க்கிழமை (25.07.2006) மு.ப. 11 மணியளவில் எமது நிறுவனத்தில் நடைபெறும்.

கணனித்துறை சார்ந்த பட்டப்படிப்புகள் புதிய பிரிவுகள்
ஆரம்பம்: 29-07-2006 சனிக்கிழமை முற்பகல் 10 மணி

Entry Requirements:G.C.E. O/L or G.C.E. A/L

**NCC (UK)**

**Compulsory**

1. Computer Technology
2. System Development
3. Business Organisation
4. Business Communication

**Electives**
(4 Modules)

1. Programming Methods
2. Java
3. Visual Basic net
4. E-Commerce
5. A+PC Support Technician
6. Net Working
7. Multimedia
8. Developing a website
9. Computerised Accounting

International Diploma in Computer Studies Egivalent to the first year of B.Sc

International Advanced Diploma in Computer Studies B.Sc Second year

B.Sc Final year

M.Sc

IDM - NATION'S ICT ACADEMY

# வடக்கு - கிழக்கில் முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு வழங்கப்பட வேண்டியவை - பற்றி பிறிதொருதிட்ட வரைவு தயார்படுத்தப்பட்டுக் கொண்டிருப்பதாகவும், அது விரைவில் வெளியிடப்படும் எனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இதற்குப் புறம்பாக முஸ்லிம்களைப் பிரதான தரப்பாக ஏற்று யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் முஸ்லிம்கள் சார்பில் 5 அம்சங்கள் பின்னிணைப்பாகச் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும் எனவும் அவர் கூறினார்.

நேற்றுக் காலை இந்தத் திட்ட வரைவு கொழும்பில் உள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமையகமான தாருஸ்ஸலாமில் ஊடகவியலாளர் மத்தியில் வெளியிட்டு வைக்கப்பட்டது. அதில் கலந்து கொண்ட கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் அங்கு கூறியதாவது:-

"அமைதிப் பேச்சு ஸ்தம்பித்துப் போயுள்ள நிலையில் அதற்கு உற்சாக மூட்ட வேண்டிய கடமை அனைவருக்கும் உண்டு. அந்த வகையில் சமாதானத்தின்பால் பற்றுள்ள நாம் அமைதிப் பேச்சு மீள ஆரம்பிக்கும் வகையில் மேற்கொண்டு வரும் பல நடவடிக்கைகளில் ஒன்றாக அப்பேச்சில் உள்ளடக்கப்பட வேண்டிய திட்ட வரைவு ஒன்றைத் தயாரித்து வெளியிட்டு வைக்கின்றோம்.

இதில் அடங்கியுள்ள 18 அம்சங்களும் அமைதிப் பேச்சு, இடைக்கால ஏற்பாடு மற்றும் இறுதித் தீர்வு ஆகியவற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய அடிப்படை விடயங்களாகும்.

தேசிய நலன் உள்ளிட்ட வடக்கு - கிழக்கு முஸ்லிம்களின் அபிலாஷைகளையும் இத்திட்ட வரைவு தன்னகத்தே கொண்டுள்ளது. அரசு கட்டாயமாக மேற்குறிப்பிட்டுள்ள விடயங்களில் இதனை உள்ளடக்க வேண்டும் என நாம் கேட்டுக் கொள்கிறோம்.

எதிர்வருகின்ற சர்வகட்சி மாநாட்டின் போது ஏனைய அரசியல் கட்சிகளுக்கும் இத்திட்ட வரைவின் பிரதிகள் வழங்கப்படும்.

எமது அரசியல் விவகாரக் குழு தயாரித்துள்ள இத்திட்ட வரைவு விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்பட்டது. இத்திட்ட வரைவில் வடக்கு - கிழக்கில் உள்ள முஸ்லிம்களுக்கு நிலத்தொடர்பற்ற தனியான சுயாட்சி ஒன்று வழங்கப்பட வேண்டும் என்ற கோட்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது. இதை அரசு முதலில் கொள்கையளவில் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

தனி அலகு எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றி முஸ்லிம் சமூகத்துடன் ஒன்று கூடி ஆராய்ந்து வருகிறோம். இறுதித் தீர்மானம் எட்டப்பட்டதும் அது அரசிடம் சமர்ப்பிக்கப்படும்.

வடக்கு - கிழக்கிற்கு வெளியே வாழ்கின்ற முஸ்லிம்கள் நலன் தொடர்பாக அவர்களது அபிலாஷைகளையும், தேவைகளையும் உள்ளடக்கிப் பிறிதொரு சட்ட வரைவைத் தயார்படுத்தி வருகின்றோம்.

அரச கட்டமைப்பில் முஸ்லிம்களின் பங்கு இன ரீதியாகவோ அல்லது வேறு விதமாகவோ அமைவது பற்றி ஆலோசித்து வருகிறோம். அத்தீர்மானமும் விரைவில் வெளியிடப்படும்.

தற்போது வெளியிடப்பட்டுள்ள திட்ட வரைவுக்குப் புறம்பாக யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் முஸ்லிம்கள் சார்பில் 5 அம்சங்கள் பின்னிணைப்பாக இணைக்கப்பட வேண்டும்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மாற்றியமைக்க முடியாது என புலிகள் கூறி வருகின்றனர். நாம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மாற்றியமைக்கச் சொல்லவில்லை. முஸ்லிம்களைப் பிரதான தரப்பாக ஏற்று அவர்களின் சார்பில் இந்த ஐந்து அம்சங்களைப் பின்னிணைப்பாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றே புலிகளையும், அரசையும் கேட்டுக் கொள்கிறோம்.

முஸ்லிம்களுடன் கலந்தாலோசிக்கப்படாமல் வடக்கு-கிழக்கு இணைக்கப்பட்டது. அது தற்காலிகம் என்ற ரீதியில் இணைக்கப்பட்டு 16 வருடங்கள் கடந்து விட்டன.

இப்போது அதைப் பிரிப்பதில் முனைப்புக் காட்டப்படுகிறது. அதைப் பிரிப்பதும், இணைப்பதும் அரசின் வேலை. அது தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்த அரசு முயல்வதானது தமிழர்களையும், முஸ்லிம்களையும் மோதவிடும் செயலாகும். அரசு அந்த முயற்சியை நிறுத்த வேண்டும்.

ஆனால், வடக்கு - கிழக்கு நிரந்தரமாக இணைந்துதான் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு அரசு வந்தால், அதில் முஸ்லிம்களுக்கு நிரந்தரமான தனி அலகு ஒன்று கட்டாயம் வழங்கப்பட வேண்டும். தமிழ் - முஸ்லிம் மக்களை மோத விடாமல் அரசு இப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்.

இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பிரதிநிதிகள் வெளியேற வேண்டும் என புலிகள் கூறுவது துரதிஷ்டவசமானதாகும்.

தற்போதுள்ள யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் வெளியேறினால் ஏனைய நாடுகளின் பிரதிநிதிகள் வந்து மிகவும் ஆர்வத்துடன் யுத்த நிறுத்தக் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுவார்களா என்பது சந்தேகமே.

ஆகவே, இந்த விடயம் பேசித் தீர்க்கப்படவேண்டும்.''

- என்றார் அவர். (க)

# கட்டாக்காலி நாய்கள் அழிக்கும் பணி

சாவகச்சேரி,ஜுலை, 24

மட்டுவில் வடக்கு மற்றும் தெற்குப் பிரதேசங்களில் கட்டாக்காலி நாய்கள், சாவகச்சேரி பிரதேச சபையால் பிடித்து அழிக்கப்படவுள்ளன என்று சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் கு.ந.பாலச்சந்திரன் தெரிவித்தார்.

மட்டுவில் தெற்குப் பகுதியில் கட்டாக்காலி நாய்கள் இன்று திங்கட்கிழமையும் மட்டுவில் வடக்குப் பகுதியில் கட்டாக்காலி நாய்கள் நாளை செவ்வாய்க்கிழமையும் அழிக்கப்படவுள்ளன. கட்டாக்காலி நாய்கள் அதிகமாக காணப்பட்டால் இந்த நடவடிக்கை மேலும் தொடரும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்படுவதால் வளர்ப்பு நாய்களை பொதுமக்கள் கட்டி வளர்க்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (31)

# தென்மராட்சியில் நாய்களுக்கு தடுப்பூசி

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட கொடிகாமம், கைதடி, சாவகச்சேரி, வரணி, மட்டுவில், நாவற்குழி ஆகிய பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்குவிசர் நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. இன்று தொடக்கம் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் நாய் வளர்ப்போர் அந்தந்தப் பகுதி பொது சுகாதாரப் பரிசோதகருடன் தொடர்பு கொள்ளுமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (117)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 29 . 04 . 1927



மறைவு 15 . 08 . 2004

### திருமதி சுந்தரம்பிள்ளை பாக்கியம்

எமது குடும்பத்தின் ஒளி விளக்கே!
அன்பின் திருவுருவே! பாசத்தின் உறைவிடமே!
ஆண்டு இரண்டு ஆனாலும்
ஆறாது அம்மா உங்கள் பிரிவுத் துயர்...
கலையாத கோலம் அம்மா
உங்கள் புன்னகை - இன்று
காணாமல் போன மாயம் என்ன?
நெஞ்சம் வெடிக்குதம்மா - நீங்கள்
இல்லையென நினைக்கும் போது...
எப்போ வருவீர்கள் எம்கண் முன்னே?

66, இந்துக்கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம். (52565) மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## அந்தியேட்டி அழைப்பிதழ்



கடந்த 26.04.2006 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் தங்கராஜா கமலலோஜன் (கமல்)

(தொழில்நுட்பக் கல்லூரி - கொக்குவில்)

அவர்களின் வீட்டுக்கிருத்தியகிரியை நாளை (25.07.2006) செவ்வாய்க்கிழமை பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் ஆத்மா சாந்திப்பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

குறிப்பு- இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

''கமல வாசம்'' இல 115, பார்ப்பண்ணை வீதி, திருநெல்வேலி. (52568) திருமதி. கமலலோஜன் - சுகந்தினி, குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

### திருமதி புவனேஸ்வரி பொன்னுத்துரை



சங்கானையைப் பிறப்பிடமாகவும், மானிப்பாய் வீதி, ஒட்டுமடத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி பொன்னுத்துரை நேற்று (23.07.2006) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் சங்கானையைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னப்பு மற்றும் எலிசபெத் ஆச்சிப்பிள்ளையின் மகளும், சின்னப்பு பொன்னுத்துரையின் (யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப்பிரிவு, பாதுகாப்பு ஊழியர்) அன்பு மனைவியும், சுஜேந்திரனின் (சென். ஜேன்ஸ் கல்லூரி மாணவர் - 2005 Com.) அன்புத் தாயும் திருமதி மகேஸ்வரி - தேசராஜா, கணபதிப்பிள்ளை, திருமதி இராஜேஸ்வரி - புலேந்திரன், தேவராசா, திருமதி இரட்ணேஸ்வரி - செல்வரட்ணம், திருமதி நாகேஸ்வரி - கேதீஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி சின்னமணி - இரத்தினம், பழனித்துரை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (24.07.2006) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கொட்டடிய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

242/5, மானிப்பாய் வீதி, ஒட்டுமடம். (52567) தகவல்: கணவர்.

### ஐயாத்துரை இராசதுரை



தாவடி தெற்கைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக்கட்டுவன் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை இராசதுரை நேற்று (23.07.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை - செல்லம்மா தம்பதியரின் புதல்வனும் அன்னம்மா, எஆபரணம் ஆகியோரின் சகோதரனும் புனித வதியின் அன்புக் கணவரும் ரஜனி (அச்சுவேலி ப.நோ.கூ. சங்கம்), ரஞ்சினி (கொலண்ட்), ரஜித்தா, சுதா (ஜேர்மனி), மகேஸ்வரன், ஜெகதீஸ்வரன், சுபாசினி (மொரட்டுவ பல்கலைக் கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நவரட்ணம், யோகநாதன் (கொலண்ட்), கேசவன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனும் பிரணவன், நிலாணி, ஆகாஷ், சஞ்சிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.07.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்செழு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துரை இல்லம், மாசிவன் சந்தி, அச்செழு, நீர்வேலி. (52570) தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

### செல்லையா நடராசா (இளைப்பாறிய தபால் அதிபர்)

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், சக்கலாவத்தை கரணவாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா நடராசா நேற்று (23.07.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - கனகம்மா தம்பதியரின் ஏகபுத்திரனும் புவனேஸ்வரியின் (ஓய்வுபெற்ற உதவித் திட்டமிடல் பணிப்பாளர்) அன்புக் கணவரும் திருமதி தம்பிராசா மகேஸ்வரியின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற செல்லையா - தங்கமுத்து தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற திருமதி செல்லையா சிவக்கொழுந்து, திருமதி சிவசண்முகம் மகேஸ்வரி, திருமதி ஸ்ரீநாதன் பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2006) திங்கட்கிழமை பிற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

சக்கலாவத்தை, கரணவாய் வடக்கு, கரவெட்டி. (சி-50377) தகவல்: திருமதி ந.புவனேஸ்வரி (மனைவி)

### திருமதி கதிரேசு இராசம்மா

டச்சு வீதி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை வீதி, கொடிகாமத்தை வதிவிடமாகக் கொண்ட திருமதி கதிரேசு இராசம்மா அவர்கள் நேற்று (23.07.2006) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2006) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது மகளின் இல்லத்தில் (கொடிகாமம்) நடைபெற்றுப் பூதவுடல் வேவில் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

பருத்தித்துறை வீதி, கொடிகாமம். (சி-50378) தகவல்: திரு. திருமதி யோகராசா ரதிதேவி.

### அப்பாசியார் நவமணி (மணி)

(கஜமுகன் கபே உரிமையாளர்)



ஒட்டுமடம், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாசியார் நவமணி (22.07.2006) சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாசியார் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவஞானம் - ஆச்சிப்பிள்ளை (மண்டைதீவு) தம்பதியரின் மருமகனும் சிரோன்மணியின் அன்புக் கணவரும் நவமோகன், சியாமினி, வசந்தினி (கனடா), உஷாநந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுருணகுமாரி, தயானந்தன், நவராஜன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனும் நவஜீவன், நிலக்ஷிகா, ஜெயபிரவீன் ஆகியோரின் அன்பு பேரனும், இராமச்சந்திரன் (மட்டக்களப்பு), சிவசுப்பிரமணியம், ஜஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரனும் செல்வகுமார் (கனடா), செல்வநாயகம் (நீர்கொழும்பு), சிதம்பரநாதன் (கனடா), திருநாவுக்கரசு (கனடா), ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2006) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (52572) தகவல்: மனைவி, பிள்ளைகள்.

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

சத்தியராஜ், ரோஜா, ஜனகராஜ் நடித்த

எங்கிருந்தோ வந்தான்

காட்சி நேரம் : 10.30, 2.30

(சி-49188)

ராஜா யாழ்ப்பாணம்

3 ஆவது வாரம்

வடிவேல் (இருவேடம்), மனோரமா, நாசர், தேஜாஸ்ரீ - டைரக்டர் சங்கரின்

இம்சை அரசன் 23ஆம் புலிகேசி

காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்

(சி-47136)



திருகோணமலை கடலில் தத்தளித்த சிங்களவர் ஒருவர் உட்பட இரண்டு மீனவர்களை விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் காப்பாற்றிக் கரை சேர்த்தனர். சுனேதகம சசித மற்றும் ஒகஸ்ரின் வசந்தன் ஆகிய இருவருமே காப்பாற்றப்பட்டவர்கள் ஆவர்.

இவர்கள் ஆழ்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தவேளை அவர்களது படகு பழுதடைந்தது. அதனால், கடலில் குதித்து கரையை நோக்கி நீந்தி வந்தனர். மூதூர் கலரயோரத்தில் வைத்து கடற்புலிகள் இவர்களை காப்பாற்றினர்.

அவர்கள் இருவரும் நேற்று சம்பூரில் வைத்து யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் திருகோணமலை கிராமிய படையணிப் பொறுப்பாளர் சிவக்குமாரால் ஒப்படைக்கப்பட்டனர். அப்போது எடுக்கப்பட்ட படம் இது.

# கொல்லும் நோக்குடனேயே ராஜீவைத் தாக்கினேன்!

## முன்னாள் கடற்படைச் சிப்பாய் விஜயமுனி தெரிவிப்பு

19 ஆண்டுகளுக்கு முன்னர் தலைநகர் கொழும்பில் நடைபெற்ற அணிவகுப்பு மரியாதையில் ''இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் தலைக்குத்தான் இலக்கு வைத்துத்தாக்கினேன். அது மரணத்தை ஏற்படுத்தக்கூடியது. அதுவே என் நோக்கம்'' என்று இலங்கைக் கடற்படையைச் சேர்ந்த விஜித ரோகன விஜயமுனி பகிரங்கமாகத் தெரிவித்திருக்கிறார்.

1987 ஆம் ஆண்டு ஜூலை 29 ஆம் நாளன்று இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்காக இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ்காந்தி இலங்கைக்கு வருகை தந்திருந்தார்.

ஜனாதிபதி மாளிகையில் ஜூலை 29 ஆம் நாள் இந்தியாவுக்குப் புறப்பட்டுச் செல்லவிருந்த ராஜீவுக்கு முப்படைகளின் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. இந்த அணிவகுப்பின்போது பேரினவாத வெறி கொண்ட கடற்படையைச் சேர்ந்த விஜித ரோகன விஜயமுனி தான் பிடித்திருந்த துப்பாக்கியின் பின்பகுதியால் அனைவர் முன்பாகவும் ராஜீவைக்கொல்லும் நோக்கத்துடன் தாக்க - ராஜீவோ தற்செயலாகக் குனிந்துகொள்ள - ராஜீவின் தோள்பட்டையில் பலத்த அடி விழுந்தது.

இந்தியாவை அதிர்ச்சியில் உறைய வைத்த இந்தத் தாக்குதலை நடத்திய விஜித ரோகன விஜயமுனிக்கு 1990 ஆம் ஆண்டு ஜனாதிபதியால் மன்னிப்பு அளிக்கப்பட்டுவிட்டது.

அதன் பின்னர் விஜித ரோகன விஜய முனி சிஹல உறுமய சார்பில் தேர்தலில் போட்டியிட்டு அரசியல் முகத்தையும் வெளிப் படுத்திக்கொண்டு இப்போது வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகிறார்.

19 ஆண்டுகளுக்குப்பின்னர் ராஜீவைத் தான் தாக்கியது குறித்துக் கொஞ்சமும் குறையாத தீவிரத்துடன் ரோகன விஜயமுனி கொழும்பு ஊடகம் ஒன்றுக்குச்செவ்வி அளித்துள்ளார். அந்தச் செவ்வியிலேயே மேற்கண்டவாறு அவர் கூறியுள்ளார். (ஐ)

---

## வேலணை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலை ஒன்றில் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு இடம்பெற்றுக் கொண்டிருந்தது. அங்கும் தேடுதல் நடத்திய படையினர் பயிற்சியில் பங்கேற்றவர்களுக்கு சிற்றுண்டி, குடி தண்ணீர் வழங்கும் பணியில் ஈடுபட்டிருந்த தீவகக் கல்வி வலயப் பணியாளர் கே. குகனேஸ்வரன் என்பவரை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்தனர்.

பின்னர் அவரது வீடும் சோதனையிடப்பட்டது.

இவரை விடுவிக்க வலயக் கல்வி அதிகாரிகள் நேற்று மாலை படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (1-167)

---

## கல்வியங்காட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் சம்பவ இடத்தில் விசாரணை நடத்திய பின்னர் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு யாழ். வைத்தியசாலைக்கு அனுப்புமாறு உத்தரவிட்டார்.

கல்வியங்காட்டில், கோயில் வீதி - ஆடியபாதம் வீதிச் சந்தியில் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் இரு இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரே இவர்களைச் சுட்டுக்கொன்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்.கோயில் வீதியைச் சேர்ந்த செல்வம் சுதர்சன் (வயது 22) மற்றும் திருநெல்வேலியைச் சேர்ந்த அன்ரன் கனகரட்ணம் துஷ்யந்தன் (வயது 19) ஆகியோரே கொல்லப்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட நீதிமன்ற மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் நேற்று மாலை சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை நடத்தி சடலங்களை பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார். (1-78-86)

# தளபதி மல்லவராச்சிக்கு ஒரு வருட சேவை நீடிப்பு

கொழும்பு, ஜூலை 24

இலங்கை இராணுவத்தின் பதில் தளபதியான மேஜர் ஜெனரல் நந்தமல்லவராச்சிக்கு ஒரு வருடம் சேவை நீடிப்பு வழங்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

அடுத்த மாதம் 2 ஆம் திகதியுடன் அவருக்கு 55 வயதாகிறது. எனினும், அவரது திறமையின் அடிப்படையில் அவரை மேலும் ஒரு வருட காலம் பணிநீடிப்புச் செய்ய ஜனாதிபதி தீர்மானித்திருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

---

## வடக்கு - கிழக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன் முதற்கட்டமாக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை நேற்று களுத்துறை யில் ஆரம்பிக்கப்பட்டது.

வடக்கையும், கிழக்கையும் இணைத் தமை பெரும் துரோகம் என்று தெரிவித்திருக்கும் அந்த அமைப்பு வடக்கு-கிழக்கைப் பிரிப்பதற்கு அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத் தியிருக்கிறது. (க)

---

## அமைதி முயற்சிகளுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவு வழங்கி வருகிறோம். சர்வகட்சி மாநாடுகளில் கலந்து அது தொடர்பான நமது கருத்தைத் தெரிவித்துவருகிறோம்.

நாம் அரசுடன் இணைவதாகவிருந்தால் எமது இணைவால் அமைதிப் பேச்சு நடைபெறவேண்டும். நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டும்.

அவ்வாறு இல்லாவிடில் வேறெந்த நோக்கத்திற்காகவும் எம்மால் அரசுடன் இணைய முடியாது. தற்போதைய சூழல் பேச்சு ஒன்று ஆரம்பமாவதற்கு உகந்ததாக இல்லை.

நாம் அரசுடன் இணைந்தவுடன் பேச்சுக்கான வழி பிறக்கும். அதற்கான சரியான முயற்சி மேற்கொள்ளப்படும் என அரசு எமக்கு உத்தரவாதமளித்தால் நாம் அரசுடன் இணைவோம் - என்றார். (க)

---

## கோணாவிலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் அதிகாலை மீட்கப்பட்டது. இறந்த யுவதி அணிந்திருந்த நகைகள் கொள்ளையடிக்கப்பட்டிருந்தன.

இறந்தவர் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டார் என்று விசாரனைகளில் தெரியவந்தது.

இந்தக் கொலை மற்றும் கொள்ளை குறித்து. கிளிநொச்சி மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர் செ.தனஞ்செயனின் பணிப்பின் பேரில் கிளிநொச்சி காவல்துறைப் பணிமனைப் பொறுப்பாளர் செல்வி.பொ.பவாணி தலைமையிலான காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டனர்.

விசாரனையில் கிடைத்த தகவலையடுத்து சந்தேகத்தின் பேரில் காவல்துறையினர் ஒருவரை கைதுசெய்தனர். யுவதியிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட நகைகளும் மீட்கப்பட்டன.

காவல்துறையினர் மேலதிக விசாரனையை மேற்கொண்டு வருகின்றனர். (203)

---

## வவுனியாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளிக்க வேண்டும் என்று வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவனாதன் கிஷோர் விடுத்த கோரிக்கையை அடுத்து அவர்கள் நேற்று மாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இன்று இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவிருக்கின்றனர்.

இதேவேளை, வவுனியா தோணிக்கல் பகுதியிலுள்ள மயானம் ஒன்றில் நேற்று இளைஞர்கள் இருவர் சூட்டுக் காயங்களுடன் சடலங்களாக மீட்கப்பட்டிருக்கின்றனர்.

இருவரில் ஒருவர் சிங்கள இளைஞர் மற்றவர் தமிழர். சிங்கள இளைஞர் மடுகந்த பகுதியைச் சேர்ந்தவர் என்றும் இவர் ஊர்காவற் படை வீரர் எனவும் பொலிஸார் கூறினர். தமிழ் இளைஞர் இராசேந்திரகுளம் பகுதியைச் சேர்ந்தவர். இருவரது சடலங்களும் கைகள், கால்கள் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்டன என்று கூறப்பட்டது.

இது தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (1-164)

---

## இரவு வானில் புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குக் கிடைத்த தகவலை இந்தச் சம்பவம் உறுதிப்படுத்தி இருப்பதாகவும் கூறப்படுகிறது.

சில தினங்களுக்கு முன்னர் இரவு நேரத்தில் தங்கள் கெரில்லாக்களுக்கு விமானத்திலிருந்து பரசூட் மூலம் குதிப்பதற்கான பயிற்சிகளை புலிகள் வழங்கியிருக்கின்றனர் என்ற தகவலும் விமானப் படையினருக்கு கிடைத்திருக்கின்றதாம். பெரும் தாக்குதல்களுக்காகக் கெரில்லாக்களை வான் வழியாகத் தரையிறக்கும் நோக்குடன் அவர்களுக்கு இந்தப் பயிற்சி அளிக்கப்படுவதாகக் கருதப்படுகிறது - என்றும் பாதுகாப்பு ஆய்வாளர்கள் சந்தேகிக்கின்றனர்.

இதேவேளை -

அண்மையில் விமானப்படையினர் நடத்திய குண்டு வீச்சில் சேதமடைந்த விமான ஓடு தளத்தைப் புலிகள் சீர் செய்து விட்டனர் என்றும் புலனாய்வுத்துறை வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன. சுமார் நான்கு குண்டுகள் அந்த விமான ஓடு தளத்தைத் தாக்கிச் சேதப்படுத்தி இருந்தன என்றும் கூறப்படுகிறது.

1.4 கிலோமீற்றர் நீளமான புலிகளின் ஓடு தளத்தில் 'ஹேர்க்குலிஸ் - 3' ரக விமானங்கள் உட்பட இலகு ரக விமானங்களைத் தரையிறக்கும் வசதி உள்ளது என்றும் கூறப்படுகிறது.

மற்றொரு திடுக்கிடும் தகவலும் விமானப்படையினருக்குக் கிடைத்துள்ளது.

வன்னியில் பிறிதொரு இடத்தில் புலிகள் பெரிய பிரதேசம் ஒன்றைத் துப்பரவு செய்து வருகின்றனர். புதுக்குடியிருப்பில் இருந்து தெற்கே 10 கிலோமீற்றர் தொலைவில் - முல்லைத்தீவில் - இந்தப் புதிய இடம் தெரிவு செய்யப்பட்டிருப்பது விமானப்படையின் ஆளில்லாத வேவு விமானம் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

இது புலிகள் தங்கள் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இரண்டாவது விமான ஓடு தளத்தை அமைப்பதையே எடுத்துக் காட்டுவதாக விமானப்படையினர் சந்தேகிக்கின்றனர். (ஐ)

---

## புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணை செய்வதற் காகவே இந்தச் சட்டம் அமுல் செய்யப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான சட்டம் தயாரிக்கப்பட்டு வெளிநாடுகளிலுள்ள சட்டவல்லுநர்களுக்கு அது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் இந்த வருட இறுதிக்குள் இச்சட்டம் அமுலுக்கு வந்துவிடும் என்றும் நீதித்துறைப் பொறுப்பாளர் பரா கூறினார்.

'எமது சட்டத்தில் எது பயங்கரவாதம் என்பதற்கு சரியான வரையறை கொடுக்கப்பட்டிருக்கும்' என்று பரா தெரிவித்தார். இப்படி அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (க)


மனங்களில் நிறைந்தவனே...!



அமரர் தங்கராஜா கமலலோஜன்
(பாதுகாப்பு உத்தியோகத்தர்.
தொழில் நுட்பக்கல்லூரி)

என்றுமே மறவாத ஓங்கிய நெடு நினைவாய் உன்
நினைவுகள் எங்கள் மனதை உறுத்துகின்றனவே....
அன்பான நண்பனாய்....
சமூக சேவகனாய்....
உறவுகளுக்கு உன்னதமானவனாய்....
இருந்தவனே - எங்கேயடா சென்றாய்?
சொல்லாமல் கொள்ளாமல்
நீசென்ற மாயம்தான் என்னவோ?
இரவோடு இரவாக- நீ
இறைவனிடம் சென்று விட்டாயோ?
தொன்னூறு நாளென்ன
தொன்னூறு ஆண்டுகள் சென்றாலும்
என்றும் உன்நினைவு -எங்கள் மனங்களில் நிறைந்திருக்கும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

நிர்வாகம்
வளர்மதி சனசமூக நிலையம்

Diploma in Computerized Accounting
(With Manual Accounting)
#MYOB #Quick Book Pro #Accpack
30.07.2006 வரை 80% சலுகை
MCS Supported By UNDP/JRRP மேலதிக விபரங்களுக்கு நேரில் 324, Palaly Road, Jaffna.

விமானப் பயணச் சீட்டு
* முன்கூட்டிய பதிவுகளுக்கு சலுகைக் கட்டணம்
* யாழ்.கொழும்பு துரித தபால் மற்றும் ஆவண சேவை




இல.32, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 3916, 0777 517019,
0777 801038

IDM Computer Studics
Island wide (PVT) ltd
NCC (u.k)
கற்கை நெறிகள்
விபரங்களுக்கு
12 ஆம் பக்கம் பார்க்க....


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.07.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.